Annual Subscription Rs. 60/-
Price Rs. 5/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் - 21 இதழ்-12 டிசம்பர் 2008



கிறிஸ்துவின் சபை
தாராபுரம் ரோடு, காங்கயம் - 638 701.
✆ 04257 - 230030, Cell : 98427 - 30382, 99655 - 30385
E-mail : kangayamcofc@eth.net

# உங்கள் கருத்துக்கள், ஆலோசனைகள் வேண்டும்

கடந்த 15,16 ஆண்டுகளாக **திருமறை ஆசான்** மாத இதழில் வெளிவந்த என்னுடைய **ஆசிரியர் உரை** களைத் தொகுத்து, 2 (அ) 3 நூல்களாக வெளியிட விரும்புகிறேன். அதற்கு முன்பாக, வாசகர்களாகிய உங்களுக்கு இது எந்தளவு பயனுள்ளதாக இருக்குமென்பதைத் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

இவ்விலக்கியப்பணிக்கு, பரலோக தேவனுடைய தயவோடு, உங்களது ஆலோசனைகளும், ஊக்கமும், பொருளாதார ஒத்துழைப்பும் அத்தியாவசியம்.

ஆகையால், தனிப்பட்ட முறையிலும், குழுவாகவும், சபையாகவும் நீங்கள் எப்படிப் பங்களிக்க முடியுமென்பதைத் தெரிவித்து, இப்பணியைத் தாங்குமாறு ஜெபத்தோடு வேண்டுகிறேன்.

**உங்கள் கருத்துக்களை எதிர்பார்க்கும்,**

**ஆசிரியர்.**

## ஆசானின் அறிவுரையில் ...


1. ஆசிரியர் உரை ........ 1
2. கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வதெப்படி? ........ 10
3. பெண்கள் பகுதி ........ 14
4. வாலிபர் பகுதி ........ 17
5. சிறுவர் பகுதி ........ 20
6. விசுவாசத்தின் அடிப்படைகள் ........ 22
7. இரத்த சாட்சிகள் ........ 26
8. கிறிஸ்துமஸ் ........ 29

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

**Vol. 21 DECEMBER - 2008 Issue - 12**

ஆசிரியர் உரை

# "எப்படி எங்களை சிநேகித்தீர்?"

நம் தாய் மொழியாம் தமிழ் மொழியில் கேள்வி வார்த்தைகள் என்று பல உண்டு. ஏன்? என்ன? எத்தனை? எங்கே? எப்படி? போன்றவைகள் இதில் அடங்கும். இந்தக் கேள்வி வார்த்தைகள் ஒவ்வொன்றும் வேறுபட்ட சூழ்நிலைகளில் அதன் தன்மைக்கேற்ப வும், தேவைக்கேற்பவும் பயன்படுத்தப்படும். இக்கேள்வி வார்த்தை களில் ஒன்றாகிய எப்படி? என்பது, பெரும்பாலும் ஒன்று விளங்காமலும், புரியாமலும் இருக்கும்போது தான் பயன்படுத்தப்படும். அதாவது, நம்மைத் தொடர்பு கொள்பவரின் காரியங்கள் முழுமையாகத் தெரியாமல் சந்தேகத்திற்கிடமானதாகவும், ஏற்றுக்கொள்வதற்குக் கடினமானதாகவும் இருக்கும்போது அது எப்படி, இது எப்படி என்று கேட்கப்படும். மனிதன் குறைவுள்ளவனாகவும், தவறிழைக்கக் கூடிய வனாக இருக்கிறபடியால், மனிதனுக்கு மனிதன் தொடர்பு கொள்ளும் போது இப்படிக் கேட்க வேண்டிய அவசியம் ஏற்படுவதை நம்மால் கிரகித்துக் கொள்ள முடிகிறது.

ஆனால், சர்வ ஞானமும், சகல வல்லமையும், எல்லா அதிகாரமும் கொண்ட யெகோவா, மனிதனோடு தொடர்பு கொள்ளும் போது அவரைப் பார்த்து "எப்படி" என்று கேட்பது எவ்விதத்திலும் நியாயமானதாகத் தெரியவில்லை. ஏனெனில், தேவன் தன் பங்கில் ஒருபோதும் குறைவைத்துத் தவறிழைக்கமாட்டார். அத்தோடு, அவர் செய்யும் காரியங்கள் சந்தேகத்திற்கிடமானதாகவோ, அறிந்து கொள்வதற்கு அரிதானதாகவோ ஒருபோதும் இருக்காது. இருப்பினும் பழைய ஏற்பாட்டின் கடைசித் தீர்க்கனாகிய மல்கியாவின் நாட்களில் வாழ்ந்த தேவ ஜனம், சர்வ வல்லவரை நோக்கி கொஞ்சமும் ஈவு இரக்கமில்லாமல் இப்படிக் கேட்டிருக்கிறார்கள். மனிதன் நன்றி கெட்ட

வன் என்பதை நாமறிந்திருக்கிறோம். ஆனால், இந்த ஜனங்களோ நன்றியைச் சுட்டுத் தின்றவர்களாகவும், குத்திக் கொன்றவர்களாகவும் அல்லவா இருந்திருக்கிறார்கள்!.

சரி, இக் கேள்வி கேட்கப்பட்டதற்கான சூழ்நிலையைத் தெரிந்து கொள்ள, இந்நூலின் பின்னணியை நமது ஆசானின் வழக்கத்தின்படி பார்த்து விடுவோம்.

நெகேமியாவின் காலத்தில் வாழ்ந்த பழைய ஏற்பாட்டின் கடைசித் தீர்க்கனாகிய மல்கியா, இஸ்ரவேல் ஜனங்களின் ஆன்மீகச் சீரழிவிற்கு எதிராகத் தீர்க்கதரிசனம் உரைக்கும்படி ஏற்படுத்தப்பட்ட வன். இவன் இருப்பிடத் தகவல் பற்றியோ, குடும்பப் பின்னணி பற்றி யோ வேதாகமம் நமக்கு ஒன்றும் கூறுவதில்லை. இவன் பெயருக்கான பொருள், "என் தூதன்" என்பது. புதிய ஏற்பாட்டின் தூதனாகிய "யோவான் ஸ்நானகன்" பற்றி இவன் அறிவிப்பதால், "என் தூதன்" என்ற பதம் இவனுக்குப் பொருத்தமாகவே உள்ளது.

இந்நூல் எழுதப்பட்ட காலத்தில், எருசலேம் தேவாலயம் புதிப்பிக்கப்பட்டு சுமார் 100 ஆண்டுகள் கடந்து விட்டது. சிறையிருப் பிலிருந்து ஆரம்பத்தில் வந்தவர்கள் ஒரு நூறு ஆண்டைக் கடந்திருந் தாலும், இன்னும் சிறு, சிறு குழுக்களாகத் திரும்பி வருவது தொடர்ந்து கொண்டிருந்தது.

இந்நாட்களிலான ஆன்மீக நிலை, பரலோகத்தின் தேவன் அடுத்த சுமார் 400 ஆண்டுகளுக்கு மௌனம் காக்கும் அளவுக்குப் படு மோசமாக இருந்தது. சொல்லப்போனால், தேவனுக்கு விரோதமாகச் செய்வதில், உனக்கு நான் சளைத்தவன் அல்ல என்பது போல, ஆசாரி யர்களும், ஜனங்களும் போட்டி போட்டுச் செயல்பட்டனர். ஆசாரியர் கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட தேவப் பணியை மலிவாகவும், இழி வாகவும் செய்தனர். ஜனங்களோ தங்கள் துன்மார்க்கத்தில் மூழ்கி மூர்ச்சையற்றுக் கிடந்தனர். ஆம், மாய்மாலம், உண்மையற்ற நிலை, தேவனற்ற மக்களோடு திருமண உறவு, தேவன் சொல்லாத காரணங் களுக்காக திருமண முறிவு, சடங்குகளும், சம்பிரதாயங்களும் கொண்ட சத்தற்ற ஆராதனை முறை, தாங்கள் எப்படி நடந்தாலும் தேவன் தங்களைக் கைவிடமாட்டார் என்ற மமதை போன்றவை அவர் களுக்குள்ளே தலைவிரித்து ஆடிக் கொண்டிருந்தது. தேவனுடைய வார்த்தைகள் அவர்கள் வாழ்க்கையில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. மொத்தத்தில், தங்களது பாவ பயங்கரத்தால் தேவ னோடிருந்த உறவு முற்றிலும் முறிந்து, வெகு விரைவில் அவர்கள் தண்டனைக்குக் காக்கப்பட்டவர்களாக இருந்தனர்.

இப்படிப்பட்ட பின்னணியில் தேவன் மல்கியாவைக் கொண்டு என்ன பேசினார் என்பதை முதல் அதிகாரத்தின் முதல் ஐந்து வசனங்களில் பாருங்கள். "*மல்கியாவைக் கொண்டு கர்த்தர் இஸ்ர வேலுக்குச் சொன்ன வார்த்தையின் பாரம். நான் உங்களைச் சிநேகித் தேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்; அதற்கு நீங்கள் எங்களை எப்படிச் சிநேகித்தீர் என்கிறீர்கள்; கர்த்தர் சொல்லு கிறார்; ஏசா யாக்கோபுக்குச் சகோதரன் அல்லவோ? ஆகிலும் யாக்கோபை நான் சிநேகித்தேன், ஏசாவையோ நான் வெறுத்தேன்;*

*அவனுடைய சுதந்திரத்தை வனாந்தரத்திலுள்ள வலுசர்ப்பங்களின் தாவும் ஆக்கினேன். ஏதோமியர் நாம் எளிமைப்பட்டோம்; ஆனாலும் பாழானவைகளைத் திரும்ப கட்டுவோம் என்று சொல்லுகிறார்கள். அதற்குக் கர்த்தர் அவர்கள் கட்டுவார்கள், நான் இடிப்பேன். அவர்கள் துன்மார்க்கத்தின் எல்லையென்றும், கர்த்தர் என்றைக்கும் சினம் வைக்கிற ஜனமென்றும் சொல்லப்படுவார்கள் என்கிறார். இதை உங்கள் கண்கள் காணும் அப்பொழுது நீங்கள்; கர்த்தர் இஸ்ரவேலுடைய எல்லை துவக்கி மகிமைப்படுத்தப்படுவார் என்பீர்கள் (மல் 1:1-5)*".

இந்த முதல் ஐந்து வசனங்களில், இந்த நன்றி கெட்ட ஜனங்கள், இல்லையில்லை நன்றி கொன்ற ஜனங்கள். எங்க ளை எப்படிச் சிநேகித்தீர் என்று கேட்டது எவ்வளவு பெரிய மூடத் தனம் என்பது நமக்கு விளங்கும். தன்னால் நினைக்கப்படுவதற்குக் கூட ஒரு பொருட்டாக இல்லாத மனிதன் (சங்.8:4) இதயத்தை இரும் பாக்கிக் கொண்டு எங்களை எப்படிச் சிநேகித்தீர் என்று கேட்ட போது, இடி போன்ற இவ்வார்த்தைகளை தேவன் எப்படித்தான் தாங்கிக் கொண்டு, பொறுமையாகவும் அதேசமயம், விளக்கமாகவும் பதில் சொன்னாரோ? அது அவருக்கே வெளிச்சம்.

அன்பானவர்களே, இதைப் படித்துக்கொண்டு மல்கியாவின் நாட்களில் வாழ்ந்தவர்களை நினைத்துப் பல்லைக் கடிக்க வேண்டாம். ஏனெனில், நாமும் அவர்களுக்குச் சரி பங்காளிகளாகவே உள்ளோம். எவ்விதத்திலும் நாம் அவர்களுக்கு இளைத்தவர்களோ அல்லது சளைத்தவர்களோ அல்ல. எப்படியெனில், புதிய ஏற்பாட்டின் கீழாக, கிறிஸ்துவின் காலத்தில் வாழும் நம்மை தேவன் சிநேகித்துச் செய்த நன்மைகள் ஒன்றா, இரண்டா? அவைகளைச் சொல்லி மாளாதே!

ஆனால், நம்முடைய நாட்களில் நாம் காணும் கிறிஸ்தவம், எல்லாவற்றையும் வீணாக்கி, விழலுக்கிறைத்த நீராக்கி விட்டதே. இது எப்படி நியாயமாகும்? கிறிஸ்துவினாலும், கிறிஸ்துவின் சுவிசேஷத்தினாலும், கிறிஸ்துவின் சபைக்குள்ளாகக் கிடைக்கும் ஆசீர்வாதங்கள் அனைத்தும் பின்னுக்குத் தள்ளப்பட்டு, பக்தி என்ற பெயரால் வேடிக்கையும், கேளிக்கையும், துதித்தல் என்ற பெயரால் ஆட்டமும், பாட்டமும், விசேஷித்த நாட்கள் என்ற பெயரால் பண்டிகைகளும், கொண்டாட்டங்களும் அரங்கேறிக் கொண்டிருக்கிறதே. மல்கியாவின் நாட்களை நகல் எடுத்தது போலல்லவா இன்றைய கிறிஸ்தவத்தின் நிலையும் காணப்படுகிறது.

முதல் நூற்றாண்டுக் காலத்தில், கிறிஸ்துவையும், கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்தையும் பற்றிக் கொள்ளாமல் வாழ்ந்தவர்கள் குறித்து வேதம் எப்படி எச்சரிக்கிறது பாருங்கள். "*மாயமான தாழ்மையிலும், தேவதூதர்களுக்குச் செய்யும் ஆராதனையிலும் விருப்பமுற்று, காணாதவைகளிலே துணிவாய் நுழைந்து தன் மாம்ச சிந்தையினாலே வீணாய் இறுமாப்புக் கொண்டிருக்கிற எவனும் உங்கள் பந்தயப்பொருளை நீங்கள் இழந்து போகும்படி உங்களை வஞ்சியாதிருக்க பாருங்கள்*" (கொலோ 2:19). இந்த எச்சரிப்பின் வசனத்தில் காணாதவைகளிலே துணிவாய் நுழைந்து

என்ற சொற்றொடரைக் கவனியுங்கள். காணாதவைகள் என்றால் வெளிப்படுத்தப்படாதவைகள். காணாதவைகளில் துணிவாய் நுழையக்கூடாது என்பதின் பொருள், நம்முடைய பக்தி வாழ்வுக் கென்று வேதாகமத்தில் வெளிப்படுத்தப்படாத எதையும் நாம் செய்யவே கூடாது என்பது தான். தேவ காரியங்களில் துணிகரம் என்பது மிகவும் பயங்கரமானது. அஞ்சி நடுங்க வேண்டியது. இதை அறிந்து தான் தாவீது "*துணிகரமான பாவங்களுக்கு உமது அடியேனை விலக்கிக்காரும்*" என்று கெஞ்சினான் (சங். 19:13). "துணிகரம்" என்கிற காரியத்தில் தாவீதுக்கிருந்த மனநிலை நமக்கு இருக்கிறதா? நம்முடைய பதில் "ஆம், இருக்கிறது" என்பதானால் நாம் ஏற்பாடு செய்து கொண்டும், நடத்திக் கொண்டுமிருக்கிற பண்டிகை கொண் டாட்டங்களுக்கு ஆதாரம் எங்கே இருக்கிறது? எந்த வசனம் இது பற்றிச் சொல்லுகிறது? இயேசு கட்டளையிடாத ஒன்றை, வேதம் வெளிப்படுத்தாத ஒன்றை, அப்போஸ்தலர்கள் பிரசங்கிக்காத ஒன்றை, முதல் நூற்றாண்டுத் திருச்சபையார் கடைபிடிக்காத ஒன்றைச் செய்வது துணிகரமில்லையா? சொல்லுங்கள். காணாதவைகளில் பக்தி என்ற பெயரால் துணிவாய் நுழைந்து, மனவிருப்பம் போல் எல்லாவற்றை யும் செய்துவிட்டுப் பரலோகம் போய் விடலாம் என்று உண்மையாக வே நீங்கள் நினைக்கிறீர்களா? அது முடியுமா? பின்னே ஏன் இப்படி? சிந்தியுங்கள்.

சரி, மல்கியாவைக்கொண்டு கர்த்தர் அவர்களை சிநேகித்தேன் என்று சொல்கிறார் அல்லவா? அந்த சிநேகம் எப்படிப்பட்டதாய் இருந் தது என்றும், அந்த சிநேகம் நமக்குத்தரும் பாடங்கள் என்ன வென்றும் இப்பொழுது பார்ப்போம்.

## I. தெரிந்து கொள்ளும் தேவ சிநேகம் (வ.௨,௩)

மல்கியாவின் காலத்து நன்றி கொன்ற மக்களின், "எங்களை எப்படிச் சிநேகித்தீர்?" என்ற கேள்விக்கு, பரலோகத்தின் தேவன் கொடுக்கும் முதலாவது பதில், என்னுடைய சிநேகம் தெரிந்து கொள் ளும் சிநேகம் என்பது.

இஸ்ரவேல் ஜனங்கள் யாக்கோபின் வம்சத்தில் வந்தவர்கள் (ஆதி 35:10) ஈசாக்குக்கு இளைய மகனாக பிறந்த இரட்டையர்களில் ஒருவனாகிய இவனைத் தேவன் கர்ப்பத்தில் இருக்கும் போதே தெரிந்து கொண்டார். "*அதற்கு கர்த்தர் இரண்டு ஜாதிகள் உன் கர்ப்பத்தில் உண்டாயிருக்கிறது; இரண்டுவித ஜனங்கள் உன் வயிற்றிலிருந்து பிரியும்; அவர்களில் ஒரு ஜனத்தார் மற்ற ஜனத்தாரைப் பார்க்கிலும் பலத்திருப்பார்கள், மூத்தவன் இளைய வனைச் சேவிப்பான்*" என்றார் (ஆதி 25:23, ரோமர் 9:13). இப்படி தேவனால் பிரத்யேகமாகத் தெரிந்து கொள்ளப்பட்ட இவர்கள் குறித்து, உபாகமம் புத்தகம், "*நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்த ஜனம், பூச்சக்கரத்திலுள்ள எல்லா ஜனங்களிலும் உன் தேவனா கிய கர்த்தர் உன்னைத் தமக்குச் சொந்தமாக்கியிருக்கும்படி தெரிந்து கொண்டார்*" (உபா 7:6) என்று கூறுகிறது. உபாகமம் 14:2-ம், "*நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தருக்குப் பரிசுத்த மான ஜனங்கள்; பூமியின் மீதெங்குமுள்ள எல்லா ஜனங்களிலும் உங்களையே கர்த்தர் தமக்குச் சொந்த ஜனங்களாயிருக்கத்*

தெரிந்து கொண்டார்” என்று கூறி இதை உறுதி செய்கிறது. ஆக, மேற்கண்ட வசனங்கள், தேவன் இஸ்ரவேல் ஜனங்களை தெரிந்தெடுத்து சிநேகித்தார் என்று எவ்வித சந்தேகத்திற்கிடமின்றிச் சொல்லுகிறது. ஆனால்! தேவனின் இந்தத் தெரிந்தெடுக்கும் அன்பைப் புரிந்து கொள்ளாமல் எங்களை எப்படிச் சிநேகித்தீர் என்று கேட்டுள்ளார்கள்.

பட்சபாதமில்லாத பரலோக தேவன் (அப் 10:34), அன்றைக்கு இஸ்ரவேல் ஜனங்களைத் தெரிந்து கொண்டது போல, கிறிஸ்துவின் காலத்தில் வாழும் நம்மையும் அவர் தெரிந்து கொள்ள சித்தமுள்ளவராயிருக்கிறார். ஆனால், இரண்டிற்கும் வேறுபாடு உண்டு. பவுலடியார், எபேசு பட்டணத்திலிருந்த கிறிஸ்தவர்களுக்கு எழுதும் போது, “....அவர் உலகத் தோற்றத்திற்கு முன்னே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டார்” (எபே 1:4) என்று கூறுகிறார். கண்டிப்பாக, இந்தத் தெரிந்து கொள்ளுதல், யாக்கோபை யும், அதன் மூலம் இஸ்ரவேலையும் தெரிந்து கொண்டதைக் காட்டிலும் மேலானதாக உள்ளது. ஆனால், இந்தத் தெரிந்து கொள்ளுதல் எப்படி நடக்கிறது? எபேசியர்கள் யார்? சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்தவர் கள். எபேசியர்கள் கீழ்ப்படிந்த இந்த சுவிசேஷம் குறித்துப் பவுலடி யார் என்ன கூறுகிறார்? “...சுவிசேஷம் மனுஷருடைய யோசனை யின்படியானதல்ல” என்றும் (கலா 1:11) இயேசுக் கிறிஸ்து அதை வெளிப்படுத்தினார் என்றும் கூறுகிறார் (1:12).

இன்னும் இந்த சுவிசேஷத்தின் மேன்மை பற்றி பவுலடியார் கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபத்தில் விளக்கமாகக் கூறுகிறார். “உலகத் தோற்றத்திற்கு” முன்னே தேவன் நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப்பட்டுமாயிருந்த ரகசியமானதாயிருந்த தேவ ஞானத்தையே பேசுகிறோம் என்று (1கொரி 1:7) மேலும் “எழுதியிருக்கிறபடி, தேவன் நம்மில் அன்பு கூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை. அவைகள் மனுஷருடைய இருதயத்தில் தோன்றவுமில்லை” என்கிறார் (1கொரி. 1:9). அநேகர் எண்ணுவது போல, இவைகள் பரலோகத்தைக் குறித்துப்பேசும் வார்த்தைகள் அல்ல. மாறாக, சுவிசேஷத்தைக் குறித்தே இது பேசுகிறது.

ஆக, உலகத் தோற்றத்திற்கு முன்னே திட்டமிடப்பட்ட சுவிசேஷத்தினாலே அழைக்கப்பட்டு (1தெச 2:14) ஒருவர் அதற்குக் கீழ்ப்படியும்போது, அவர் உலகத்தோற்றத்திற்கு முன்பாகவே தெரிந்து கொள்ளப்பட்டவராக இருக்கிறார். இந்த தெரிந்து கொள்ளுதல், கிறிஸ்தவன் என்று உலகத்தில் அழைக்கப்படுகிற எல்லோருக்கும் பொருந்தாமல், கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்தவர்களுக்கு மாத்திரமே பொருந்தும். கிறிஸ்துவின் சுவிசேஷத்தின்படியான இந்த தெரிந்து கொள்ளுதல் பழைய பிரமாணத்தின் காலத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் தெரிந்து கொள்ளப்பட்டதைப் பார்க்கிலும் நிச்சயமாக மேலானது. ஆனால், அந்த தெரிந்து கொள்ளுதலை அவர்கள் அற்பமாக எண்ணியதற்கே அவர்கள் கடிந்து கொள்ளப்பட்டிருக்கும் போது, கிறிஸ்துவின் சிலுவைப்பாடுகளை

மூலதனமாக வைத்து வெளிப்படுத்தப்பட்டிருக்கும் சுவிசேஷத்தின் மூலமான தெரிந்து கொள்ளுதலை நாம் அசட்டை செய்வோமானால், நிலைமை என்ன வாகும் என்பதை எண்ணிப்பாருங்கள்.

ஆகையால், வருடத்தின் இறுதியில் வாழ்ந்து கொண்டிருக்கும் அருமையானவர்களே, வருடத்தை இனியும் வீணாக்காமல் சுவிசேஷத்தின் அழைப்பை ஏற்றுக்கொண்டு, அதற்கு கீழ்ப்படிந்து தேவனுடைய தெரிந்து கொள்ளும் அன்புக்கு நாம் நம்மை உட்படுத்து வோம். அதன் மூலம் வருகின்ற வருடங்களுக்கு மாத்திரம் அல்ல, நித்திய காலத்திற்குமான ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வோம்.

**II. பாதுகாக்கும் தேவ சிநேகம் (வ. 4)**

மல்கியாவின் காலத்து நன்றி கொன்ற மக்களின், "எங்களை எப்படிச் சிநேகித்தீர்?" என்ற கேள்விக்கு பரலோகத்தின் தேவன் கொடுக்கும் இரண்டாவது பதில் "என்னுடைய அன்பு பாதுகாக்கும் அன்பு" என்பது.

தேவனுடைய பாதுகாக்கும் அன்பை, அதிலும் குறிப்பாக இஸ்ர வேல் ஜனங்கள் காரியத்தில், அவர் அவர்களை எப்படிப் பாதுகாத்து வழிநடத்தி வந்தார் என்பதை விவரிப்பது ஒரு அலாதியான காரியம். எகிப்தில் யோசேப்பை எழும்பச் செய்ததில் ஆரம்பித்து, பாபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து திரும்பி வருவது வரைக்குமான சுமார் ஆயிரமாண்டு சரித்திரம் பற்றி இதைத் தெரிந்து கொள்ளப் பேச வேண்டும். ஆனால், அதற்குத் தேவையான சமயம் இங்கே இல்லை. ஏனெனில், இப்பகுதியில், ஏசாவின் வம்சமாகிய ஏதோமியரையும், இஸ்ரவேலையும் மட்டும் சம்மந்தப்படுத்தி தேவன் பேசுகிறார். ஏதோம் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்குச் செய்த தீமை பற்றி யும் அந்தத் தீமையின் நாட்களிலே நான் இஸ்ரவேலைப் பாதுகாத் தேன் என்றும் கூறுகிறார்.

இஸ்ரவேலினிமித்தமும், தங்கள் பொல்லாப்பினிமித்தமும் ஏதோமியர் அழிக்கப்பட்டது, ஓர் அதிகாரம் கொண்ட ஒபதியா நூல் முழுவதிலும் இடம் பெற்றுள்ளது. அதில், ஏதோம் கன்மலை வெடிப்பு களாகிய உயர்ந்த ஸ்தானத்திலே குடியிருந்து, என்னைத் தரையிலே விழத்தள்ளுகிறவன் யார் என்று என் இருதயத்தில் சொல்லுகிறான் (ஒபதி 3) ஆனால், தேவனோ "நீ கழுகைப் போல உயரப் போனா லும், நீ நட்சத்திரங்களுக்குள்ளே உன் கூட்டைக் கட்டினாலும், அவ்விடத்திலிருந்தும் உன்னை விழத்தள்ளுவேன்" என்கிறார் (ஒபதி 4). இப்படித் தள்ளப்பட்ட ஏதோமியர், "*.... நாம் எளிமையாக்கப் பட்டோம்; ஆனாலும் பாழானவைகளைத் திரும்ப கட்டுவோம் என்று சொல்லுகிறார்கள். அதற்கு கர்த்தர் அவர்கள் கட்டுவார்கள் நான் இடிப்போன் அவர்கள் துன்மார்க்கத்தின் எல்லை யொன்றும், கர்த்தர் என்றைக்கும் சினம் வைக்கிற ஜனமென்றும் சொல்லப்படுவார்கள்*" என்கிறார் (மல்1:4).

தேவன் இப்படி இந்த ஏதோமியரை விடாமல் துரத்துவதற்கான காரணத்தையும் கொடுக்கிறார் ஒபதியா தீர்க்கன். "*உன் சகோதரன் அந்நியர் வசமான நாளாகிய அவனுடைய நாளை நீ பிரியத் தோடே பாராமலும், யூதா புத்திரருடைய அழிவின் நாளிலே*

அவர்கள் நிமித்தம் சந்தோஷப்படாமலும், அவர்கள் நெருக்கப் படுகிற நாளிலே நீ பெருமையாய் பேசாமலும் இருக்க வேண்டி யதாயிருந்தது" என்று ஏதோமின் தவறைக் குறிப்பிடுகிறார் (ஒபதி 12). தன்னால், தெரிந்து கொள்ளப்பட்ட ஜனங்களுக்கு விரோதமாக ஒருவன் எழும்பினால் எத்தனை ஆண்டுகளானாலும், தேவன் மறக்கா மல் அவனிடம் கணக்குக் கேட்கிறார். ஆம், வனாந்திர யாத்திரையில் இஸ்ரவேலுக்கு வழிவிட மறுத்த அமலேக்கியர் குறித்து (யாத் 17:8-16) சுமார் 400 ஆண்டுகள் கழித்து, கர்த்தர் சொல்லுகிறதைக் கவனியுங்கள். சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வந்த போது, அமலேக்கு அவர் களுக்கு வழிமறித்த செய்கையை மனதிலே வைத்திருக்கிறேன் என்று. (1சாமு 15:2) அடுத்த வசனத்தில், சவுல் ராஜாவிடம், அதற் காக, நீ போய் அவர்களை அதம் பண்ணு என்று கட்டளை கொடுத்தார்.

அருமையானவர்களே, தேவன் தம்முடைய பிள்ளைகளைப் பாதுகாக்கிற காரியத்தில் எப்போதும் அக்கறையுடையவராகவே இருக்கிறார். கர்த்தரின் பாதுகாப்பு குறித்து எட்டு வசனங்களைக் கொண்ட சங்கீதம் 121 அழகாக வர்ணிக்கிறது. "இதோ, இஸ்ரவே லைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை, தூங்குவதுமில்லை" என்று (121:4) மேலும், மோசேயின் மரணத்திற்கு பிறகு தன்னால் தெரிந்து கொள்ளப் பட்ட யோசுவாவோடு பேசும்போது, "நான் உன்னை விட்டு விலகு வதுமில்லை, நான் உன்னைக் கைவிடுவது மில்லை" என்கிறார் (யோசு 1:5) இன்னும், ஏசாயா தீர்க்கனைக் கொண்டு சொல்லும்போது, "நீ பயப்படாதே, நான் உன்னுடனே இருக்கிறேன், திகையாதே, நான் உன் தேவன், நான் உன்னை பலப்படுத்தி உனக்குச் சகாயம் பண்ணுவேன்; என் நீதியின் வலது கரத்தினால் உன்னைத் தாங்குவேன்" (ஏசா 41:10) என்று கூறுகிறார்.

தேவனுடைய பாதுகாக்கும் அன்பு புதிய ஏற்பாட்டின் காலத்தி லும் மாறாததாகவே உள்ளது. பவுலடியார் கொரிந்தியர்களுக்கு இரண்டாவது நிருபத்தை எழுதும் போது தேவனுடைய பாதுகாப்பு குறித்து எப்படிக் கூறுகிறார் என்று பாருங்கள். "ஆகையால் சகோதர ரே, ஆசியாவில் எங்களுக்கு நேரிட்ட உபத்திரவத்தை நீங்கள் அறியாதிருக்க எங்களுக்கு மனதில்லை. என்னவெனில், பிழைப் போம் என்கிற நம்பிக்கை அற்றுப் போகத்தக்கதாக, எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிகப்பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று நாங்கள் எங்கள் மேல் நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்பிகிற தேவன் மேல் நம்பிக்கையாயிருக்கத் தக்கதாக, மரணம் வருமென்று நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயித்திருந்தோம். அப்படிப்பட்ட மரணத்தினின்றும் அவர் எங்களைத் தப்புவித்தார், இப்பொழுதும் தப்புவிக்கிறார், இன்னும் தப்பவிப்பார் என்று அவரை நம்பியிருக்கிறோம்" (2கொரி 1:8-10).

சர்வ வல்லவரின் இந்தப் பாதுகாக்கும் அன்பு, எதிர்வரும் புதிய ஆண்டில் உங்களுக்குக் கிடைக்க வேண்டுமானால், நீங்கள் தேவனு டைய பிள்ளைகளாக இருக்க வேண்டியது அவசியம். அதற்கு

கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் மூலம் தெரிந்தெடுக்கப்பட்டவர்களா யிருக்க வேண்டும். கிறிஸ்துவின் புதிய ஏற்பாட்டு உபதேசத்தின்படி நமது பக்தி வாழ்க்கையின் ஒவ்வொரு காரியத்தையும் அமைத்திருக்க வேண்டும். நாம் அப்படி வாழ்கிறவர்களாயிருந்தால், புதிய ஆண்டு எப்படியிருக்கு மோ என்ற கவலையே நமக்கு வேண்டாம். தேவனு டைய பாதுகாக்கும் அன்பு இவ்வாழ்க்கையிலும், மறுமையின் வாழ்க் கையிலும் நம்மோடிருந்து நம்மை நிச்சயமாகவே வழிநடத்தும்.

## III. செயல்படுத்தும் தேவ சிநேகம் (வ. 5)

மல்கியாவின் காலத்து நன்றி கொன்ற ஜனங்களின், "எங்களை எப்படிச் சிநேகித்தீர்?" என்ற கேள்விக்குப் பரலோகத்தின் தேவன் கொடுக் கும் இன்னுமொரு பதில், "என்னுடைய சிநேகம் செயல்படுத்தும் சிநேகம்" என்பது.

நம்முடைய நாட்களில் உலகத்தில் காட்டப்படும் அன்பு பெரும் பாலும் உதட்டளவில் காட்டப்படும் ஒன்றாகவே உள்ளது. வாய் நிறையச் சொல்லுவார்கள். ஆனால், செயலில் ஒன்றும் இருக்காது. இது அரசியல் வாதிக்கும் பொருந்தும், ஆன்மீகவாதிக்கும் பொருந்தும். ஆனால், தேவனுடைய அன்பு அப்படிப்பட்டதல்ல. எரேமியா தீர்க்கன் தேவ அன்பை, "அநாதி சிநேகம்" என்று அறிவிக்கிறார் (எரே 31:3) பவுல் அந்த அன்பை தியாகமான அன்பு என்று கூறுகிறார் (ரோம 5:8) இப்படிப்பட்ட அன்புக்குச் சொந்தக்காரராகிய தேவன் தமது அன்பை செயல்படுத்திக் காட்டுகிறார். மல்கியா 1:4ல் "அவர்கள் கட்டுவார்கள், நான் இடிப்பேன்" என்று சொன்னவர், அத்தோடு நிறுத்தாமல், அடுத்த வசனத்தில், "இதை உங்கள் கண்கள் காணும்" என்றார் (மல் 1:5)

தன்னுடைய செயலை அவர்கள் கண்கள் காணும் என்றால் அது நடந்தே தீரும் என்று தான் பொருள். தேவன் சொல்லும் காரியங்கள் எதுவும், எப்போதும் தடைபடாது. மோசேயின் மரணத்திற்கு பிறகு இஸ்ர வேலை வழி நடத்தும் பொறுப்பை ஏற்ற யோசுவா, யோர்தானைக் கடந்து வந்து, கானானியரை முறியடித்து, தேசத்தை 12 கோத்திரத்தாருக்குப் பங் கிட்டுக் கொடுத்த பிறகு சொல்லுவதைக் கவனியுங்கள், "*கர்த்தர் இஸ்ரவேல் குடும்பத்தாருக்குச் சொல்லியிருந்த நல்வார்த்தைகளி லெல்லாம் ஒரு வார்த்தையும் தவறிப்போகவில்லை. எல்லாம் நிறை வேறிற்று*" என்றான் (யோசுவா 21:45). தேவனுடைய வார்த்தை யின் மேன்மை குறித்து புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் இன்னும் சிறப்பாகச் சொல்லியுள்ளனர். "*வானமும், பூமியும் ஒழிந்துபோம் என் வார்த்தை களோ ஒழிந்துபோவதில்லை*" (லூக் 21:33) இன்னும் கூட, தேவனுடைய வார்த்தையின் எழுத்தும், எழுத்தின் உறுப்பும் அவமாய் போகாது என்று கூறப்பட்டுள்ளது (லூக் 16:17) ஆகையால், தேவன் சொன்னபடிதான் காரியங்கள் எல்லா காலத்திலும் நடக்குமென்பதில் எவ்வித சந்தேகமும் தேவையில்லை.

அந்த தேவன் தான் ஏதோம் பிடிக்கப்படுவதை உங்கள் "*கண்கள் காணும்*" என்று கூறினார் இதன் மூலம், இஸ்ரவேலுக்கான எனது அன்பை நான் செயல்படுத்திக்காட்டுவேன் என்று கூறினார். இப்படிச் செயல்படுத் தும் அன்பைக் கொண்டிருக்கும் தேவன், கிறிஸ்துவின் காலத்தில் வாழும், வாழ்ந்த ஒவ்வொருவருக்கும் செயல்படுத்திக் காட்டின மிகப்பெரிய அன்பு எது தெரியுமா? யோவான் 3:16 தான், "*தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்*

போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத்தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார். ஆம், தம்முடைய ஒரே பேறான குமாரனை நமக்காகத் தந்து அன்பு கூர்ந்தார்''.

எதற்காக இப்படித் தன் அன்பைச் செயல்படுத்திக் காட்டினார்? நானும், நீங்களும், கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடைவதற்காக. நாம் கெட்டுப்போகக்கூடாது என்று யாராவது ஏதாவது எப்போதாவது செய்திருக்கிறார்களா? அதிலும் தேவன் நமக்காகச் செய்த அளவுக்கு யாராவது செய்திருக்கிறார்களா? அல்லது செய்யத்தான் முடியுமா? நம்முடைய நித்திய வாழ்வுக்காக தேவன் இவ்வளவு பெரிய தியாகத்தைச் செய்திருக்கும் போது, அந்த தேவக்குமாரன் நமக்காக தன்னையே சுகந்த வாசனையான காணிக்கையாகவும், பலியாகவும் ஒப்புக் கொடுத்திருக்கும் போது, (எபே 5:2) அதன் பலனை பெற்றவர் களாக நாம் வாழ்ந்து கொண் டுள்ளோமா? இவ்வருடத்தின் விளிம் பிலே நின்று கொண்டிருக்கும் நாம் இவைகளைப் பற்றிச் சிந்திக்கக் கடமைப்பட்டிருக் கிறோம்.

தேவன் தன்னுடைய ஒரே பேறான குமாரனைக் கொடுத்து, தனதன்பைச் செயல்படுத்திக் காட்டினதற்கு ஒரு மேலான நோக்கம் உண்டு. நாம் ஒவ்வொருவரும் ஞானஸ்நானத்தின் மூலம் பாவ மன்னிப்படைந்து (அப் 2:38), கர்த்தரால் அவருடைய சபையில் சேர்க்கப்பட்டு (அப். 2:47) மரணபரியந்தம் உண்மையுள்ளவர் களாயிருந்து (வெளி 2:10) மறுமையை அந்த மகிமையுள்ள இடத்தில் கழிக்க வேண்டுமென்பது தான் அந்நோக்கம். இந்த நோக்கத்தை நாம் நிறைவேற்ற நம்மை ஒப்புக்கொடுத்துள்ளோமா? சொல்லுங்கள்.

இயேசுகிறிஸ்து நமக்காக ஒரே தரம் பலியிடப்பட்டு விட்டார். "...பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனி இல்லை" (எபி 10:26). இனி இருப்பதெல்லாம், கிறிஸ்துவின் விரோதிகளையும், கிறிஸ்துவின் உபதேசத்தின் விரோதிகளையும், கிறிஸ்துவின் சபை யின் விரோதிகளையும் பட்சிக்கும் கோபாக்கினை தான் (எபி 10:27). அப்படியானால் நாம் என்ன செய்ய வேண்டும்? கர்த்தர் புதிய ஆண்டைக் கூட்டிக் கொடுத்தால், நாம் அந்த ஆண்டிற்குள் பாவத்தோடு, கோபாக்கினை யின் பிள்ளைகளாகப் பிரவேசிக்க வேண்டுமா? வேண்டாம். வேண்டவே வேண்டாம்.

மாறாக, செயல்படுத்தும் அன்பு கொண்ட தேவனாலே திட்ட மிடப்பட்டு (எபே 3:9), கிறிஸ்து தம் இரத்தம் சிந்தி சம்பாதித்த ஒன்றான மெய்ச்சபையில் (அப் 20:28), விசுவாசித்து (மாற் 16:16) மனந்திரும்பி (லூக் 13:3), அறிக்கையிட்டு (ரோம 10:9,10), பாவ மன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெற்று (அப் 22:16), கர்த்தரால் சேர்க்கப்பட்டு (அப் 2:47), வாரந்தோறும் ஆவியோடும், உண்மை யோடும் ஆராதித்து (யோவா 4:24), கிறிஸ்துவின் வசனப்படி வாழ்ந்து (யோவா 12:48) நியாயத் தீர்ப்பின் நாளில், "வாருங்கள், என் பிதாவி னால் ஆசீர்வதிக்கப்பட்டவர் களே" (மத் 25:34) என்று சொல்லத்தக்க வாழ்க்கையை நடத்துவோமாக! அப்பொழுது, நீதியின் கிரீடம் நமக்குச் சொந்தமாகும் (2தீமோ 4:8). ஆமென்.

**S. ராஜநாயகம்**

*"ஆசானின் வாசகர்கள் ஒவ்வொருவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்களை அடியேனின் குடும்பத்தினர் சார்பாகத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்'. - ஆசிரியர்.*

# கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வதெப்படி?

ஒருவன் கிறிஸ்தவனாக மாற வேண்டுமானால், கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பதில் தனக்குள்ள விசுவாசத்தை அறிக்கை யிட வேண்டும். அப்போஸ்தலர் 8-ம் அதிகாரத்தில் எத்தியோப்பிய மந்திரியின் மனமாற்றம் குறித்து நாம் வாசிக்கிறோம். அவன் ஞானஸ் நானம் பெறுவதற்கு முன், கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று, தான் விசுவாசிக்கிறேன் என்று சொன்னான். ரோமர் 10:10-ல் அப்போஸ்தல னாகிய பவுல் இரட்சிப்புண்டாக வாயினால் அறிக்கை பண்ணப்படும் என்கிறார். ஆனால், ஒருவன் தான் இரட்சிக்கப்படுவதற்கு, கிறிஸ்து வில் தனக்குள்ள விசுவாசத்தை அறிக்கையிடுவதோடு நிறுத்திக் கொள்ளாமல், அந்த இரட்சிப்பில் உறுதியாக நிலைதிருப்பதற்கு, தன்னுடைய ஜீவிய காலம் முழுவதும், கிறிஸ்துவின் நாமத்தைத் தொடர்ந்து அறிக்கை பண்ண வேண்டும். அதாவது, கிறிஸ்துவை தனது வாயினால் மாத்திரம் அறிக்கையிடுவதற்கு அவன் ஆயத்தமாயிராமல், அனுதின ஜீவியத்தின் மூலம் கிறிஸ்துவை அன்றாடம் அறிக்கை செய்ய வேண்டும்.

ஒருவன் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவதன் பலனாக, அவன் இரட்சிக்கப்பட்டு, அவருடைய சபையாகிய குடும்பத்தில் சேர்க்கப்படு கிறான். இப்பொழுது அவன், மீண்டும் பிறந்த ஒரு மனிதன் (யோவான் 3:3,5) அதன்படி அவன் கிறிஸ்துவுக்குள் ஒரு புது சிருஷ்டி. இப்படி யிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக் கின்றான். பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின (2கொரி 5:17) என்று பவுல் கூறுகிறார்.

ஆனால், கிறிஸ்துவுக்குள் இருப்பது என்றால் என்ன வேண்டு வென்றும், அவருக்குச் சொந்தம் என்றால் என்னவென்றும் தெரிந்து கொள்ள நாம் மேலும் தொடருவோம். பவுல் கொலோசெ பட்டணத் திலிருந்த கிறிஸ்தவர்களுக்கு இவ்விதம் எழுதுகிறார். நீங்கள் கிறிஸ்து வுடன் கூட எழுந்ததுண்டானால் கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளை தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள். ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்து வுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடோ கூட மகிமை யிலே வெளிப்படுவீர்கள். ஆகையால், விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாரதனையான பொருளாசை ஆகிய இவை களை பூமியில் உண்டு பண்ணுகிற உங்கள் அவயங்களை அழித்துப் போடுங்கள் இவைகளின் பொருட்டே கீழ்ப்படியாமையின் பிள்ளை கள் மேல் தேவ கோபாக்கினை வரும் நீங்களும் முற் காலத்தில் அவர் களுக்குள்ளே சஞ்சரித்த போது, அவைகளைச் செய்து கொண்டு

வந்தீர்கள். இப்பொழுதோ கோபமும் மூர்க்கமும், பொறாமையும் உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டுவிடுங்கள். ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்; பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு, தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருக் கிறீர்களே, அதிலே கிரேக்கனென்றும், யூதனென்றுமில்லை விருத்த சேதனமுள்ளவனென்றும், விருத்தசேனமில்லாதவனென்றுமில்லை. புறஜாதியானென்றும், புறதேசத்தானென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை; கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமுமாயிருக்கிறார். ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும், பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக் கொண்டு; ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்கு குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். இவை எல்லாவற்றின்மேலும் பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள். தேவ சமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது. இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்; நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள். கிறிஸ்துவின் வசனம் உங்களுக்கே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக் கொருவர் போதித்து புத்தி சொல்லிக்கொண்டு உங்கள் இருதயத்திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி; வார்த்தையினாலாவது கிரியையினாலாவது, நீங்கள் எதைச் செய்தாலும், அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள் (கொலோ. 3:1-17).

மேலும், அப்போஸ்தலன் பவுலுடைய வார்த்தைகளைத் தொடர்ந்து நாம் படித்து கிறிஸ்தவ வாழ்க்கைப் பற்றி தெரிந்து கொள்வோம். இங்கே அவர், அந்நாட்களில் இருந்த கிறிஸ்தவர்கள் பற்றி பேசுகிறார். அவர்கள் சபையானது ஆரம்பமானதற்கும், அது வளர்ந்து பரிபூரணத்தை அடைவதற்கும், எப்படி அற்புத வல்லமையின் உதவியை சார்ந்தார்களென்றும் கூறுகிறார். மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும் ஒருமனப்பட்டவர்களாகி கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்கப் பூரண புருஷராகும் வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்தி விருத்தி அடைவதற்காகவும், அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரை தீர்க்கதரிகளாகவும், சிலரை சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார். நாம் இனிக்குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள

போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர் களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார். அவராலே சரீரம் முழுவதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயமும் தன்தன் அளவுக்குத் தக்கதாய்க் கிரியைசெய்கிறபடியே, அது அன்பினாலே தனக்கு பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது. ஆதலால், கர்த்தருக்குள் நான் உங்களுக்குச் சாட்சியாகச் சொல்லி எச்சரிக்கிறது என்னவெனில், மற்ற புறஜாதிகள் தங்கள் வீணாண சிந்தையிலே நடக்கிறதுபோல நீங்கள் இனி நடவாமலிருங்கள். அவர்கள் புத்தியில் அந்தகாரப்பட்டு, தங்கள் இருதய கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருந்து உணர்வில்லாதவர் களாய், சகலவித அசுத்தங்களையும் ஆவலோடே நடப்பிக்கும்படி, தங்களை காமவிகாரத்திற்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள். நீங்களோ இவ்விதமாய்க் கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ளவில்லை. இயேசுவினி டத்திலுள்ள சத்தியத்தின்படி நீங்கள் அவரிடத்தில் கேட்டறிந்து அவரால் போதிக்கப்பட்டீர்களே. அந்தப்படி, முந்தின நடக்கைக் குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்து போட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும், பரிசுத்தத்திலும், தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக் கொள்ளுங்கள். அன்றியும் நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாக யிருக்கிறபடியால் பொய்யைக் களைந்து அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன். நீங்கள கோபம் கொண்டாலும் பாவஞ் செய்யாதிருங்கள். சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது. பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள். திருடுகிறவன் இனி திருடாமல், குறைச்சலுள்ளவனுக்கு கொடுக்கத் தக்கதாக தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலை செய்து பிரயாசப்படக்கடவன் கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம். பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்.

அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள். சகல விதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்த துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக் கடவது. ஒருவருக்கொருவர் தயவாயும், மனஉருக்கமாயும் இருந்து, கிறஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்தது போல நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் (எபே 4:11-37).

புதிய ஏற்பாட்டு பகுதி அனைத்தையும் குறிப்பிடுவது என் நோக்கமல்ல. ஆனால், இந்த வசனங்கள் எல்லாவற்றிலும், ஒரு கிறிஸ்தவன் எப்படிப்பட்டவன், எப்படியிருக்க வேண்டும் என்பவைகள் சொல்லப்பட்டிருக்கிறது. கிறிஸ்தவ வாழ்க்கை என்பது பரிசுத்தமான தேவபக்திக்குண்டான வாழ்க்கையாகும். இது தேவனுக்கும், சக மனிதனுக்கும் சேவை செய்வதாகும்.

கர்த்தருக்கு நமது கீழ்ப்படிதலைக்காட்டுவதன் மூலம், கிறிஸ்துவின் நாமத்தை நாம் பெற்றுக்கொள்கிறோம். (அப் 11:26; 1பேதுரு 4:14) அப்படிச் செய்வதின் மூலம், அவரை கனப்படுத்தி, அவர் தான் நமது கர்த்தரும், இரட்சகருமென்று அறிக்கையிடுகிறோம். நாம் அவரில் வாழ்கிறோம் என்றும், அவர் நமக்குள் வாழ்கிறார் என்றும் சொல்லுகிறோம். ஆகவே, நாம் அவருடைய நாமத்தை எடுத்துக்கொள்வதோடல்லாமல், நம்முடைய பேச்சிலும், செய்கையிலும் ஒவ்வொரு நாளும் அவரை அறிக்கையிட வேண்டும். கிறிஸ்தவனாக இருப்பதற்கான சிறந்த வழிமுறை அதுதான்.

இப்பொழுது, நாம் புதிதாக தொடங்கப்பட்ட ஒரு பிராந்திய சபையின் அங்கத்தினர்களாக இருந்தாலும் நீண்ட நாளாக ஒன்றின் அங்கமாயிருந்தாலும், சிறிய அல்லது பெரிய சபையின் அங்கத்தினர்களாக இருந்தாலும் நாம் யார் என்றும், நாம் எங்கே அங்கமாயிருக்கிறோமென்பது குறித்தும் கவனிக்கப்படத்தக்கவர்களாகவேயிருப்போம்.

சில நேரங்களில், நாம் கிறிஸ்தவர்களாயிருப்பதை விட்டுக் கொடுக்க வேண்டியதாயிருக்க வேண்டுமோவென்று, நம்மை நாமே நொந்து கொள்கிறவர்களாயிருப்போம். ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பது. கடினமானது என்று கூட எண்ணக்கூடும். நாம் எந்த ஒரு நற்காரியத்தையும் விட்டுவிடவேண்டுமென கர்த்தர் கேட்கவில்லை நம்மை துன்பப்படுத்தி நம்மை அழித்துப்போடக்கூடியவைகளிலிருந்து நம்மை விலக்கிக் கொள்ளும்படியாக கர்த்தர் கேட்கிறார். இது, நமது சரீரப்பிரகாரமான மற்றும் ஆவிக்குரிய இரண்டு வாழ்க்கைக்கும் பொருந்தும். அத்தோடு, நம்மோடிருந்து நமக்கு உதவி செய்வேன் என்ற கர்த்தரின் வாக்குத்தத்தமும் நமக்குண்டு. இன்றும் நமக்கு உதவி செய்யும்படி, நமது பரம தகப்பனை ஜெபத்தின் மூலமாக நாம் அழைக்கலாம். மேலும் நமக்கு உதவி, நம்மை உற்சாகப்படுத்தும்படியாக நம்முடைய சகோதரர்களை நாம் நோக்கிப் பார்க்கலாம். உண்மையாகவே ஒரு கிறிஸ்தவன் மற்றெல்லாரைக்காட்டிலும் ஆசீர்வதிக்கப்பட்டவன்.

ஆகவே, நாம் ஒவ்வொருவருக்கும், உண்மையுள்ள கிறிஸ்தவர்களாயிருந்து, நம்மை சுற்றியிருப்பவர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுவது எவ்வளவு முக்கியமானதென்று உணரும்படி, நாம் நமது நடக்கையின் மூலம் காட்டுவோமாக!.

**J.C. CHOATE**

# ஏவாள் தாய்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரிகளே, இதை வாசிக்கும் தாய்மார்களே, வாலிபப் பிள்ளைகளே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்துதல்களை தெரிவித்துக் கொள்கிறேன். வேதாகமத்தில் காணப்படும் பெண்களை கவனித்து இன்றைக்கு நமக்கு பிரயோஜனமாயிருக்கும்படி பாடங்களை கற்றுக் கொள்ளும் வகையில் இம்மாதம் நம் ஆதித் தாயாகிய ஏவாளிடமிருந்து சில காரியங்களைத் தெரிந்து நம் வாழ்வில் அதை பயன்படுத்திக் கொள்வோம்.

தேவன் தாம் உண்டாக்கிய ஆணும், பெண்ணும் எல்லா உயிரினங்களைக் காட்டிலும் உயர்ந்தவர்களாக இருக்க வேண்டுமென்று, அவர்களை அப்பழுக்கற்று, மனதிலும், எண்ணத்திலும் தூய்மையானவர்களாக உண்டாக்கினார்.

ஏதேன் தோட்டத்தை அவர்களுக்கு வீடாக கொடுத்தார். எல்லா சந்தோஷத்தையும் பகிர்ந்து கொள்ள துணையை ஏற்படுத்தினார். சரீரத் தேவைகள் யாவும் அவர்களுக்கு சந்திக்கப்பட்டது. அவர்கள் செய்வதற்கு வேலையும் கொடுக்கப்பட்டது. பின்பு அவர்கள் கீழ்ப்படிந்திருக்க ஒரு சட்டம் கொடுக்கப்பட்டது.

நன்மை எது, தீமை எது என்று தெரிந்து கொள்ளக்கூடிய உரிமையை தேவன் அவர்களுக்குக் கொடுத்தார். ஒவ்வொரு காலக் கட்டத்திலும் மனிதன் தெய்வீக சட்டத்திற்கு அல்லது தேவனுடைய அதிகாரத்திற்கு கீழ்ப்படிகிறானா என்பதை தெரிந்து கொள்ள சில பரீட்சைகளை கொடுக்கிறார்.

1. நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்க வேண்டாம் என்று (ஆதி. 2:16,17) தேவன் ஆதாம், ஏவாளிடம் கூறியிருந்தார்.

2. ஆதி. 22ம் அதிகாரத்தில் தன் ஒரே குமாரனாகிய ஈசாக்கை பலியிட தேவன் கேட்கிறார்.

3. தன் குஷ்டரோகம் நீங்க நாகமான் யோர்தானில் 7 முறை முழுக வேண்டியிருந்தது. (2இராஜா 5).

### ஏவாள் தன் பரீட்சையில் தோல்வியடைந்து சாத்தானை பின்பற்றினாள்

ஆதாம், ஏவாளின் மீது தேவன் அளவில்லா ஆசீர்வாதங்களை பொழிந்தருளியிருந்தார். ஏவாளுக்கு தன்னை நேசிக்கும் நல்ல கணவனை கொடுத்திருந்தார். ஏவாளின் சரீரத் தேவைகள் அனைத்தும் நேரடியாக தேவனால் சந்திக்கப்பட்டது. சரீரத்தை அலட்டிக் கொள்ளாமல் செய்வதற்கு நல்ல வேலை கொடுக்கப்பட்டது. வாழ்வதற்கு மிகவும் நல்ல வேலை கொடுக்கப்பட்டது. வாழ்வதற்கு மிகவும் அழகான இடம் இருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக தேவனோடு மிகவும் நெருக்க மாக உறவாடும் சிலாக்கியம் இருந்தது.

இவ்வளவும் இருந்தும் ஏவாள் திருப்திப்படவில்லை. அதை நாம் எப்படி தெரிந்து கொள்கிறோம். ஆதியாகமம் 3:1-3 வசனங்கள் அதை நமக்கு கூறுகிறது.

சாத்தான் ஏவாளிடம் வந்து தேவன் சொன்ன காரியங்களை அதாவது, உண்மையான தேவனின் வார்த்தைகளை முதலில் கூறி பிறகு சந்தேகத்தின் விதையை உள்ளத்தில் ஊன்றினான். பிறகு ஏவாளின் உள்ளத்தை அறிய காத்திருப்பது போல் நடிக்கிறான்.

ஏவாள், தேவன் சொன்ன எல்லாவற்றையும் புசிக்கலாம் ஒன்றைத்தவிர என்று பதில் சொல்லுகிறாள். மேலும், தேவன் சொல்லாத ஒன்றை கூட்டி பேசுகிறாள். அதை தொடவும் வேண்டாம் என்று சொன்னதாக கூறுகிறாள் (ஆதி 2:16,17). மேலும், தேவனின் எச்சரிப்பையும் மாற்றி பேசுகிறாள். தேவன் சொல்லியிருந்தார், "நீங்கள் அதை புசிக்கும் நாளிலே சாகவே சாவீர்கள்" என்று. ஆனால், ஏவாளே நீங்கள் "சாகாதபடிக்கு" என்று கூறுகிறாள்.

இதை பயன்படுத்திய தந்திரமுள்ள பிசாசு "சாகவே சாவதில்லை" என்று கூறியதுடன் ஏதோ தேவன் ஏவாளிடம் பொய் சொன்னதாக ஒரு ஏமாற்று வேலையை செய்கிறான். தன் வஞ்சனை வலையில் அவளை சிக்க வைப்பதற்காக உண்மைக்கு மாறாக உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், தேவனைப் போல் ஆவீர்கள், நன்மை, தீமை அறிந்து கொள்வீர்கள் என்றும், அதோடு சாவாய் என்ற வார்த்தைக்கு மாறாக சாவதில்லை (இல்லை) என்ற மூன்றெழுத்து வார்த்தையால் வஞ்சித்துவிட்டான்.

அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான் (யாக். 1:14) என்ற வசனத்தின்படி ஏவாள், மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை என்ற மூன்று காரணிகளையும் முழுவதுமாக உபயோகித்து பிசாசுக்கு கீழ்ப்படிந்து விட்டாள்.

ஏவாள் பார்த்தாள், எடுத்தாள், புசித்தாள், தன் கணவனையும் புசிக்க வைத்தாள். சாத்தான் தந்திரமான வார்த்தைகளை பேசினான். உண்மைதான். ஆனால், அதை சாப்பிடும்படி பறித்து கொடுத்து சாப்பிட வைக்கவில்லை. ஏவாள் நினைத்திருந்தால் இவை நடக்கவொட்டாமல் எப்படியாயிலும் நிறுத்தியிருந்திருக்கலாம். ஆனால், இவளோ வலியப்போய் தீமையயைத் தெரிந்து கொண்டாள்.

7,8, வசனங்களில் பார்க்கிறபடி, விலையேறப்பெற்ற ஒன்றை ஆதாமும், ஏவாளும் இழந்துவிட்டார்கள். யாதர்த்தம், பரிசுத்தம் இவைகளை இழந்தார்கள். கண்கள் திறக்கப்பட்டது. நிர்வாணத்தை உணர்ந்தார்கள். பிறகு தேவனிடமிருந்து தங்களை ஒளித்துக் கொள்ள முயன்றார்கள். 13ம் வசனத்தில் பார்த்தால் ஏவாள் நிலைமையை மோசமாக்கும் வண்ணம் இன்னும் ஒருபடி மேலே சென்று சர்ப்பத்தை குற்றப்படுத்துகிறாள்.

தான் செய்த பாவத்திற்கு தானே காரணம் என்பதற்கு பொறுப்பேற்கவில்லை. தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ் செய்தேன் என்று தாவீது சொன்னது போல் (சங். 51:4) சொல்லவில்லை. "அப்பொழுது தாவீது நாத்தானிடத்தில் நான் கர்த்தருக்கு

விரோதமாய் பாவஞ்செய்தேன்" (2 சாமு 12:13) என்று தாவீதைப் போல் இவள் கூறாமல் சர்ப்பத்தின் மேல் பழியைப் போடுகிறாள்.

ஏவாளின் கீழ்ப்படியாமையினால் ஏற்பட்ட விளைவு பாவம் மரணத்தை கொண்டு வந்தது. ஜீவ விருட்சத்தை இழந்து சரீர வாழ்க்கையில் துரத்தப்பட்டார்கள் (ஆதி 3:22-24). மேலும் ஆவிக்குரிய பிரகாரமாகவும் மரணம். அதாவது தேவனிடத்திலிருந்து பிரிய தாங்களே காரணமாகிவிட்டார்கள் (ஏசாயா 59:2). பாவமும், அக்கிரமும் தேவனிடத்திலிருந்து நம்மை பிரிக்கிறது.

பாவம் பயத்தை உண்டாக்கியது. நான் பயந்ததினால் ஒளித்துக் கொண்டேன் என்று ஆதாம் கூறுகிறான். பாவம் ஒருவனை பாவி என்று சொல்ல வைக்கிறது. என் மீறுதல்களை அறிந்திருக்கிறேன் என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது (சங். 51:3) என்று தாவீது கூறுகிறான். பாவம் ஒருவனை மனரீதியாகவும், உடல் ரீதியாகவும் வாட்டி வதைக்கிறது (சங். 38:3-8).

கிறிஸ்துவுக்குள் அருமையானவர்களே! இவ்வருடக் கடைசியில் நிற்க்கும் நாம் நம்மை நாமே ஆராய்ந்து பார்ப்போம். தேவனுடைய பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமல் இருக்கும்போது பயமும், வேதனையும் வருகிறது. அநியாயத்தை விதைக்கிறவன், வருத்தத்தை அறுப்பான் (நீதி 22:8) என்று பார்க்கிறோம்.

தேவனுக்குக் கீழ்ப்படியும் போது சமாதானமும், சந்தோஷமும் கிடைக்கிறது. கர்த்தரைத் தெய்வமாகக் கொண்டிருக்கிற ஜனம் பாக்கியமுள்ளது (சங். 144:15). ஜீவ விருட்சத்தின் மேல் அதிகாரமுள்ளவாகளாவதற்கும், வாசல்கள் வழியாய் நரகத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள் (வெளி 22:14).

நாம் இன்று தெரிந்து கொள்ளுகிற ஒரு காரியம் நாளைக்கு எந்தவிதமான விளைவை உண்டுபண்ணும் என்பதை நினைக்கிறோமா?

நாம் செய்யும், நினைக்கும், உணரும் காரியங்களுக்கு நாம் தான் நாளைக்கு பொறுப்பு என்று எண்ணுகிறோமா?

நம்மை நியாயப்படுத்த, நாம் எத்தனை முறை பிறர் மீது பழியைப் போடுகிறோம்?

இன்றைக்கு நாம் எவ்வாறு சோதிக்கப்படுகிறோம்? தீமையை செய்வதற்கு எவைகள் காரணமாயிருக்கின்றன.

தேவன் விரும்பாதவற்றை செய்ய எத்தனப்படுகிறோமா?

தயவு கூர்ந்து சிந்திப்போம். வேத வசனம் தான் நம் நியாயதிபதி. அதற்குக் கீழ்ப்படிவோம். நம் விருப்பத்துக்குத்தக்க வசனத்தோடு கூட்டவோ, குறைக்கவோ கூடாது. புதிய ஏற்பாட்டில் உள்ள கிறிஸ்துவின் சபை ஒன்றுதான் கிறிஸ்துவால் உண்டாக்கப்பட்டது. அந்த சபைக்குள் இருந்தால்தான் ஜீவ விருட்சத்தை மீண்டும் பெற முடியும். சிந்திப்போம்! செயல்படுவோம்!! ஆமென்.

**ரேச்சல் இராஜநாயகம்**

**உங்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்.**

# இயேசுவைக் கவர்ந்தவர்கள்

வாலிப நெஞ்சங்களுக்கு இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் நல்வாழ்த்துக்கள்! உங்களை இந்தக் கட்டுரையின் வாயிலாக மறுபடியும் சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். வாலிபப் பருவத்தில் நம்மால் மற்றவர்கள் கவரப்பட வேண்டும் என்னும் மனநிலை இருப்பது இயற்கையே. ஆனால், பெரும்பாலான வாலிபர்கள் புறம்பான தோற்றத்தினால் மற்றவர்களை கவர்வதில் கண்ணும் கருத்துமாய் உள்ளனர். உடலை பராமரிப்பதற்காக பணத்தைச் செலவழிக்கின்றனர். அதாவது, அதற்காக அநேக சரீர முயற்சிகளை எடுக்கின்றனர், ஆனால், அப்போஸ்தலனாகிய பவுல் சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது; தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்கு பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது என்று கூறுகிறார். (1தீமோதேயு 4:8) இந்த வசனத்தில் தேவன் பவுல் மூலமாக நமக்கு என்ன சொல்கிறார் என்றால் நாம் சரீர முயற்சி எடுத்து நம்முடைய உடலைப் பேணுவது குறைந்த பிரயோஜனமுள்ளது என்று சொல்கிறார். பிரயோஜனமே இல்லை என்று சொல்லவில்லை. ஒட்டுமொத்தமாக நாம் பார்க்கும் போது நம்முடைய உடலைப் பார்த்து மற்றவர்கள் கவரப்படுவதை விட, செயலினிமித்தம் நம்முடைய மனதினால் இயேசுவால் கவரப்படுவதுதான் முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருக்கிறது. நாம் இப்போது இயேசுவால் கவரப்பட்ட மூன்று பேர்களைப் பற்றி பார்ப்போம். அவர் களிடம் இருந்த எவைகள் இயேசுவை அதிகமாகக் கவர்ந்திருக் கின்ற என்பதை நாம் அறிந்து கொள்வதன் மூலமாக இயேசுவுக்கு பிரியமாக நாமும் மாறமுடியும்.

## I. *ஆயத்துறையில் அமர்ந்திருந்த மத்தேயு ஆயக்காரன்*

இயேசு அந்த திமிர்வாதக்காரனை சொஸ்தமாக்கின பின்பு அவ்விடம் விட்டு புறப்பட்டுப் போகையில், ஆயத்துறையில் உட்கார்ந்திருந்த லேவியை (மத்தேயுவை) பார்த்து இயேசு எனக்குப் பின் சென்று வா என்றார். மத்தேயு எல்லாவற்றையும் விட்டுவிட்டு இயேசுவுக்குப்பின் சென்றான் (மத்தேயு 9:9); (மாற்கு 2:13-17).

லேவி இயேசுவைப் பின்பற்றுவதற்கு முன்பு தன்னுடைய வேலைகளை சரிசெய்வதற்காக காத்திருக்கவில்லை. அதாவது, இயேசு அழைத்த அந்நேரத்தில் லேவி அம்மாதத்திற்கான ஊதியம், தான் பார்த்தது அரசாங்க வேலையாயிருந்தபடியால் வருங்காலத்தில் அரசாங்கத்திலிருந்து பெறப்போகும் தொகை என்று எதைப்பற்றியும் கவலைப்படாமல், இயேசு அழைத்த அந்நேரத்திலே எல்லாவற்றையும் விட்டுவிட்டு இயேசுவுக்குப்பின் சென்றான். நாம்

நம்முடைய வாழ்க்கையில் சம்பாத்தியத்திற்கும், வருமானத்திற்கும், இன்னும் அநேக உலகப்பிரகாரமான காரியங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறவர்களாயிருந்தால் தேவனுடைய பார்வையில் அருமையாக காணப்படமாட்டோம். இந்த உலகப்பிரகாரமான காரியங்கள் எல்லாம் மதிப்பற்றவைகள். இயேசுவை பின்பற்றுவதோடு நாம் இவைகளை ஒப்பிட்டுப்பார்த்தால் அற்பமானவைகள். நாம் செய்யுஞ் செலவை கணக்குப்பார்த்த பின்பு தான் இயேசுவைப் பின்பற்ற வேண்டும். அதாவது, இயேசுவை பின்பற்றுவதனால் நாம் படப்போகிற பாடுகளையும், துன்பங்களையும் எண்ணிப்பார்த்து அவரைப்பின்பற்ற வேண்டும். ஆனால், அவரோடே கூடப் பாடுகளை சகித்தோமானால் அவரோடே கூட ஆளுகையும் செய்வோம் (2தீமோ 2:12). இயேசுவினிமித்தம், சுவிசேஷத்தினிமித்தம் வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது விட்டு விட்டு இயேசுவைப் பின்பற்றினால் இப்பொழுது இம்மையிலே, துன்பங்களோடே கூட நூறத்தனையாக, வீடுகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தாய்களையும், பிள்ளைகளையும், நிலங்களையும் மறுமையிலே நித்திய ஜீவனையும் அடைவோம் என்று இயேசு வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறார். எனவே, அவரை நம்பி நாம் பின் செல்லலாம். மத்தேயு ஒரு ஆயக்காரனாயிருந்தாலும் இயேசு அவனிடத்தில் ஒரு விசேஷத் தன்மையைக்கண்டார். மற்றவர்களுடைய பார்வையில் பாவியாக கருதப்பட்ட இந்த மத்தேயுவை பாவிகளுக்கு சுவிசேஷத்தை கொண்டு செல்ல பயன்படுத்த முடியும் என்று நினைத்தார். அதுமாத்திரமல்ல, தான் அழைத்தவுடனே எதைப் பற்றியும் கவலைப்படாமல் தன்னைப் பின்பற்றினதன் வைராக்கியத்தைக் கண்டு இயேசு அதிகமாக கவரப்பட்டிருக்கிறார். அதாவது, மத்தேயுவின் இந்த விசேஷ குணம் இயேசுவை அதிகமாகக் கவர்ந்திருக்கிறது. இதனால் தான் இயேசு மத்தேயுவை சுவிசேஷத்தை அறிவிக்கக்கூடிய வல்லமையான ஒரு கருவியாக பயன்படுத்தினார்.

## II. *தாழ்மையோடு ஜெபித்த பெயரில்லாத ஆயக்காரன்*

லூக்கா 18:9-14 வசனங்களில் அந்த பரிசேயனுடைய ஜெபத்திலிருந்தும், ஆயக்காரனுடைய ஜெபத்திலிருந்தும் நாம் அநேக பாடங்களை கற்றுக் கொள்ள முடியும். முதலாவது, அந்த பரிசேயன் ஜெபத்தை பெருமையோடு தொடங்கினான், தான் அப்படிச் செய்யவில்லை. இப்படிச் செய்யவில்லை என்று பெருமிதமாக சொல்லிக்கொண்டு கடைசியில் இந்த ஆயக்காரனைப் போலவும் இராததினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன் என்றும் சொன்னான். ஒரு வேளை அவன் பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போல இல்லாதிருக்கலாம். ஆனால், அவர் மாய மாலம் என்ற ஒரு பெரிய பாவத்தைச் செய்தான் (மத்தேயு 6:5). தன்னுடைய பெருமையுள்ள இருதயத்தை, கர்வத்தை, உற்றுப்பார்க்காமல்

மற்றவர்களின் காரியங்களில் மூக்கை நுழைத்தான். ஆனால், அதற்கு மாறாக, ஆயக்காரனோ தன்னுடைய ஜெபத்தில் யாரையும் குற்ற வாளி எனத்தீர்க்கவில்லை. ஆயக்காரன் தேவனுடைய பிரசன்னத்தில் தன்னுடைய தாழ்மையையும், மரியாதையையும், பயத்தையும் காட்டினான். அநேக வேளைகளில் வாலிபர்களாகிய நாம் மற்றவர் களின் பெலவீனங்களை கண்டு குறை சொல்வதை விட்டு விட்டு நம்மைச் சார்ந்த வாலிபர்கள் தேவனண்டையில் கிட்டிச் சேர சத்தியத் தின் மூலமாக உதவி செய்ய வேண்டும். அவர்களுக்கு உதவி செய்யும் வழியைக் கண்டுபிடிப்பதற்கு தேவனிடத்தில் நாம் ஞானத்தைக் கேட்க வேண்டும்.

## III. இயேசுவை கவர்ந்த சகேயு ஆயக்காரன்

சகேயு என்னும் ஆயக்காரன் குள்ளனாயிருந்தபடியால் ஜனக்கூட்டத்தில் அவனால் இயேசுவைக் காணமுடியவில்லை. ஆனால் தன்னுடைய குறையை ஒரு காரணமாகக் காட்டி தன்னுடைய நோக்கத்திலிருந்து பின்வாங்க அனுமதிக்கவில்லை. இயேசு அருகில் வந்தால் பார்த்துக்கொள்ளலாம் என்று அவன் காத்திருக்கவுமில்லை. மாறாக, அவன் முன்னாக ஓடி ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினான். (லூக் 19:1-10) இது, அதாவது சகேயுவின் இந்த குணாதிசயம் இயேசுவை அதிகமாகக் கவர்ந்தது. அதனால் இயேசு அவர் வீட்டில் தங்குவதற்கு விருப்பம் தெரிவித்தார். சகேயு ஆயக்காரருக்குத் தலைவனாக இருந்த போதிலும் தன்னுடைய பதவி, அந்தஸ்து, பணம் போன்ற எதுவும் இயேசுவைப் பார்ப்பதற்கு தடையாக இருக்க அனுமதிக்கவில்லை. இயேசுவின் புறம்பான தோற்றத்தை காணவந்த சகேயுவின் உள்ளான தோற்றத்தை இயேசு கண்டார். அது இயேசுவை அதிகமாகக் கவர்ந்தது.

பிரியமான வாலிப நெஞ்சங்களே, மேற்கூறப்பட்ட வேதாகம கதாபாத்திரங்களில் காணப்பட்ட குணாதிசயங்கள் நம்மிடமும் காணப் பட்டால் நாம் இயேசுவால் கவரப்படுவோம். இதுகாறும் இதுபோன்ற குணாதிசயங்களை நாம் பெற்றுக் கொள்ளாவிட்டாலும் இனி வரும் புதிய ஆண்டிலிருந்தாவது இது போன்ற குணாதிசயங்களை நாம் வளர்த்துக் கொண்டால் இயேசுவின் சீஷர்களாகி அவரு டைய அன்பை இந்த உலகத்திற்கு நாம் எடுத்துரைக்க முடியும், அதற்கு தேவன் தாமே உதவி செய்வாராக ஆமென்!

**வாலிப நெஞ்சங்களுக்கு எங்கள் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!**

**பென்னி மார்ட்டின்**

## புதிய ஆண்டில் செய்யும்படி ஏன் தீர்மானிக்கக்கூடாது?

1. *உண்மையான சத்தியத்தைக் கண்டுபிடிக்க (யோவா 17:17*
2. *உண்மையான அன்பை அடையாளம் காண (அப். 2:28)*
3. *உண்மையான ஆராதனையை ஏறெடுக்க (யோவா 4:24)*
4. *உண்மையான இரட்சிப்பின் திட்டத்திற்கு ஒப்புக்கொடுக்க (மத். 28:18-20)*

சிறுவர் பகுதி

# தன்னிகரற்ற வேதாகமம்

கிறிஸ்துவுக்குள் அன்பான தம்பிகளே, தங்கைகளே! வருடத்தின் இறுதியில் நிற்கும் நாம், நம் கையில் இருக்கும் வேதாகமத்தின் சிறப்பு பறறி கொஞ்சம் பார்க்கலாமா?.

பொதுவாக, வழக்கறிஞர் நீதிமன்றத்திற்கு செல்லும் போது, தங்கள் வழக்குக்கு ஆதரவான அநேக சாட்சியங்கள் இருக்க வேண்டுமென்று விரும்புவார். நாமும் வேதாகமத்தை படிக்கும் போது அது தேவனிடத்திலிருந்து வந்தது என்பதற்கு ஏராளமான சாட்சியங்களைப்பார்க்கவேண்டும். யாருமே உட்கார்ந்து ஒரு புத்தகத்தை எழுதிவிடலாம். எது வேதாகமத்தை மற்ற புத்தகங்களை விட மேலான ஒன்றாக மாற்றுகிறது?.

ஒரு வழக்கறிஞர் வேதாகமம் தேவனிடத்திலிருந்து வந்தது தான் என்பதை நிரூபிக்க என்ன சாட்சியத்தை பயன்படுத்துவார்? மனிதர்கள் தங்களுடைய கண்டுபிடிப்புகள் எனச் சொல்வதற்கு பல நூற்றாண்டுகள் முன்பாகவே வேதாகமத்தில் இடம் பெற்றிருக்கிற விஞ்ஞானத்தகவல்களை எல்லாம் சேகரிப்பார். வேதாகமப் பக்கங்களில் இடம் பெற்றிருக்கிற மறைந்திருக்கிற ஆழங்கள் எல்லாம் உண்மைகள் என்று சமீப காலங்களில் கண்டுபிடிக்கப்பட்டவைகள் எல்லாம் விஞ்ஞானத் தகவல்களாக இருக்கின்றன.

உதாரணமாக, கடந்த காலங்களில் மக்கள் சமுத்திரத்தின் அடிமட்டம் எல்லாம் ஒரு நீச்சல் குளத்தைப் போன்றோ அல்லது ஒரு பண்ணைக் குளத்தின் அடிமட்டத் தைப் போன்றோ தான் இருக்கும் என கருதினார்கள். அதாவது மென்மையாகவும், சமமாகவும் இருக்கும் என கருதினார்கள். 1873-1876 ஆண்டுகளில் சேலஞ்சர் சாகச பயணக் குழுவினர் சமுத்திரத்தில் விஞ்ஞான ஆராய்ச்சியில் ஈடுபட்ட போது, பசிபிக் கடலில் 51/2 மைல்கள் ஆழமுள்ள மலைகளுக்கு இடையேயுள்ள பள்ளத்தை கண்டுபிடித்தனர்.

ஆயினும், இந்த சேலஞ்சர் சாகச பயணக் குழு இதை கண்டுபிடிப்பதற்கு பல ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்பே யோனா தீர்க்கதரிசி கடலுக்கு அடியில் மலைகள் இருப்பதையும், பள்ளத்தாக்குகள் இருப்பதையும் சொல்லியிருக்கிறார் (யோனா 2:5,6).

மேலும், இந்த பூமியின் வடிவம் பற்றி அநேக காரியங்கள் அறியப்படுவதற்கு பல ஆயிரம் வருடங்களுக்கு முன்பே தீர்க்கதரிசியான ஏசாயா பூமி வட்ட வடிவில் உள்ளது என்பதை தெரிவித்தார் (ஏசாயா 40:22). மேலும், இயேசு வரவிருக்கின்ற நியாயத் தீர்ப்பைப் பற்றிச் சொல்லும் போது சிலர் இரவில் தூங்கிக் கொண்டிருப்பதாகவும், மற்றவர்கள் வயல்வெளியில் வேலை செய்து கொண்டு அல்லது இயந்திரம் அரைத்துக் கொண்டு இருப்பதாகவும் கூறுகிறார் (லூக்கா 17:34-36) பூமி உருண்டையாக அல்லது வட்டமாக இல்லையென்றால், ஒரு சிலர் இரவிலும்

அதே நேரத்தில் மற்றவர்கள் பகலிலும் எப்படி இருக்க முடியும்?

மேலும், வேதாகமம் காலநிலை மாதிரியை உருவாக்கும் பூமியிலிருந்து புறப்பட்டு வரும் நீரூற்றுகளின் காற்றைப் பற்றிப்பேசுகிறது (பிரசங்கி 1:6) மனிதர்கள், ஆறுகளையும், பள்ளத்தாக்குகளையும் கணிப்பதற்கு பல ஆண்டுகள் முன்பே எல்லா நதிகளும் சமுத்திரத்திலே ஓடி விழுந்தும் சமுத்திரம் நிரம்பாது என்று சாலொமோன் குறிப்பிட்டிருக்கிறார். சமுத்திரங்களைப் பற்றி படிப்பவர்கள் சமுத்திரங்கள் இயற்கையாகவே பாதைகளைப் பெற்றிருக்கின்றன என்பதை நிர்ணயித்திருக்கின்றனர். இதை வேதாகமம் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே குறிப்பிட்டிருக்கிறது (சங். 8:8; ஏசாயா 43:16).

வேதாகமம் நீர் சுழற்சிகளைப் பற்றி கூட பேசுகிறது (ஆமோஸ் 9:6; யோபு 36:27, 28) மேலும், வேதாகமம் சமுத்திரத்தின் நடுவில் நல்ல தண்ணீர் உள்ள நீரூற்றுகள் இருப்பதாகக் கூறுகிறது (யோபு 38:16). ஆனால் இந்த உண்மை யை சமீப காலத்தில் தான் நீர் மூழ்கிக் கப்பலின் வாயிலாக கண்டுபிடித்துள்ளனர். தெளிவா கவே, இந்த சாட்சியங்கள் எல்லாம் வேதாகமம் ஒரு சாதாரண புத்தகம் அல்ல என்பதை நிரூபிக்கிறது. மனிதர்கள் கண்டுபிடிப்பதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே விஞ்ஞானத் தகவல்களை பதிவு செய்திருக்கிற தேவ ஆவியினால் ஏவப்பட்ட எழுத்தாளர்கள் தான் வேதாகமத்தை எழுதியிருக்கிறார்கள். வேதாகமம் மெய்யாகவே தேவனுடைய வார்த்தைகளைத்தான் உள்ளடக்கியிருக்கிறது.

இதை வாசித்த அன்பு தம்பி, தங்கைகளே, வேதாகமம் தனித்தன்மை வாய்ந்தது. எந்த ஒரு நூலோடும் ஒப்பிட முடியாது. எனவே, தினமும் வேதம் வாசித்து, அதன் மூலம் தேவ ஆலோசனை பெற்று நம்முடைய வாழ்க்கையை ஆசீர்வாதமாக்கிக் கொள்வோம்.

**Abel R. Nayagam**

## நல்ல மேய்ப்பன்

1. வாசல் வழியாய் பிரவேசிக்கிறான்.
2. ஆடுகள் அவன் சத்தத்திற்கு செவிக்கொடுக்கிறது.
3. ஆடுகளை பெயர் சொல்லி அழைக்கிறான்.
4. ஆடுகளுக்கு முன்பாக நடந்து போகிறான்.
5. ஆடுகளுக்காக தன் ஜீவனைக் கொடுக்கிறான்.

கடந்த மாதம், நாம் சபை வரலாறு என்கிற பாடத்தை படித்து முடித்தோம். ஆனால் அந்த பாடத்திலிருந்து நீங்களும், நானும் கற்றுக் கொள்ள வேண்டிய காரியங்களை மறுபடியும் பார்க்கலாம் என்று சொல்லியிருந்தேன். அந்த காரியங்கள் இதோ.

முதலாவது, ஜனங்கள் வேதாகமத்தை அதிகாரத்தின் ஒரே மையமாக ஏற்றுக் கொள்ளத் தவறியபோது மார்க்க ரீதியான தவறுகள் ஏற்பட்டது. அதே வேளையில், ஜனங்கள் வேதாகமத்தை அதிகாரத்தின் ஒரே மையமாக எண்ணி அதற்கு திரும்பின போது மதப்பிழைகள் எல்லாம் நீங்கிப் போயின. ஆகவே, நாம் வேதாகமத்தை அதிகாரத்தின் மையமாக எண்ணி வேதாகமத்திற்கு திரும்ப வேண்டும்.

இரண்டாவது, மனிதர்களை குறித்து எச்சரிக்கையாயிருக்க வேண்டும். எப்போதும் நம்மை நாம் காத்துக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறோம்.

மூன்றாவது, நாம் பூர்வப் பாதைகளை நாடவேண்டும் என்று நம்மிடமிருந்து தேவன் எதிர்பார்க்கிறார். அதாவது, முதல் நூற்றாண்டில் ஸ்தாபிக்கப்பட்டதாக புதிய ஏற்பாட்டில் விவரிக்கப்பட்டிருக்கிற கிறிஸ்துவின் சபைக்கே நாம் திரும்பிச் செல்ல வேண்டும்.

நான்காவது, தேவனுடைய வார்த்தையாகிய சத்தியத்தின் மேலுள்ள அன்பை தீவிரமாக வளர்த்துக் கொள்ள வேண்டும்.

ஐந்தாவது, சுவிசேஷமாகிய விசுவாசத்திலிருந்து வழிவிலகிச் செல்லுதல் அடுத்த தலைமுறைக்கு ஏற்படும் என்பதை மனதில் கொண்டவர்களாக எப்பொழுதும் காணப்படவேண்டும். ஆகவே, தேவனுடைய வார்த்தையை நம்முடைய பிள்ளைகளுக்கும், மற்றவர்களுக்கும் நாம் ஜாக்கிரதையாக போதிக்க வேண்டும்.

இனி நாம் அடுத்த பாடத்திற்கு கடந்து செல்வோம்

## பாடம் -6

**கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கமாயிருப்பதோடு தொடர்புடைய வேறு சில காரியங்கள் யாவை?**

ஆறாம் பாடத்தின் சுருக்கமான புறக் குறிப்பு இதோ :

1. பவுல் எப்பொழுதுமே தம்மை பிராந்திய சபையோடு இணைத்து செயல்பட்டார்.
2. நமக்கு ஆதி திருச்சபை என்ன உதாரணத்தைத் தருகிறது?
3. கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகிய சபையின் அங்கத்தினராக கிறிஸ்தவர்களை ஒப்பிடுதல் (ரோமர் 12 மற்றும் 1 கொரிந்தியர் 12)

4. இயேசு திராட்சைச் செடியாயிருக்கிறார். அவருடைய சபையின் அங்கத்தினர்கள் கொடிகளாயிருக்கிறார்கள். (யோவான் 15:1-8)

5. கிறிஸ்தவர்கள் ஒன்றாக இருக்க வேண்டும்.

6. கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாயிருக்கிற சபையில் அங்கத்தினராய் இருக்கிற நாம் சபை கூடி வருதலை விட்டுவிடக் கூடாது.

இப்போது இந்த கருத்துக்களை ஒவ்வொன்றாக விவரமாகப் படிப்போம்.

**அப்போஸ்தலனாகிய பவுல் எப்போதுமே தம்மை பிராந்திய சபையோடு இணைத்து செயல்பட்டார்.**

அப் 9:26-28 வசனங்களை நாம் வாசிக்கும்போது, சவுல் எருசலேமுக்கு வந்த போது என்ன செய்தார்? கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினரோடு தம்மை இணைத்துக் கொள்ள முயற்சி செய்தார். அதாவது, கர்த்தரை ஆராதிப்பதிலும், அவருடைய வேலையைச் செய்வதிலும் சபை அங்கத்தினரோடு தன்னை இணைத்துக் கொண்டார். சவுல் உங்களுக்கும், எனக்கும் ஒரு சிறந்த முன் மாதிரியாயிருக்கிறார். உலகத்தில் நாம் எந்த இடத்தில் இருந்தாலும் புதிய ஏற்பாட்டு மாதிரியில் உறுதியாக இருக்கிற சகோதரர்கள் கூடுகிற பிராந்திய கிறிஸ்துவின் சபையை கண்டுபிடிக்க வேண்டும். அதன் பின்பு கர்த்தருடைய வேலையிலும்,ஆராதனையிலும் நம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

அப் 13:1-3 வசனங்களில் நாம் பார்க்கும் போது, இதே சவுல் தம்மை அந்தியோகிவில் இருந்த கிறிஸ்துவின் சபையோடு ஈடு படுத்திக் கொண்டதாகக் காணமுடியும். அங்கே கர்த்தருடைய வேலையில் சவுல் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டது வெளிப்படையாகத் தெரிகிறது. அது நமக்கு எப்படித் தெரியும்? சவுல் உபவாசித்தார், கர்த்தருக்கு ஊழியம் செய்தார்!

பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலின்படியே சபையானது சவுலையையும், பர்னபாவையும் தேவன் என்ன செய்யும்படியாக விரும்பினாரோ அதைச் செய்யும்படி அனுப்பியது. அந்த இரண்டு உண்மையுள்ள சகோதரர்களும் தேவனுடைய வார்த்தையை பிரசங்கிக்கும்படி பல இடங்களுக்குச் சென்றார்கள்.

அப் 14:25-28 வசனங்களில், சவுலும், பர்னபாவும் தேவன் தங்களை என்ன வேலையைச் செய்யும்படியாக அனுப்பினாரோ அதைச் செய்து முடித்த பிறகு என்ன செய்தார்கள்? தங்களை வெளியே அனுப்பிய அந்தியோகியா கிறிஸ்துவின் சபைக்கு திரும்பிச் சென்றார்கள். அங்கே போய் கர்த்தர் தங்களுக்குச் செய்த காரியங்களையெல்லாம் அவர்களுக்கு அறிவித்தார்கள்.

சவுலும், பர்னபாவும் அடுத்து என்ன செய்தார்கள்? அவர்கள் நீண்ட நாட்கள் சீஷர்களுடன் தங்கினார்கள். தெளிவாகவே இது அவர்கள் கர்த்தருடைய வேலையில் தங்களை முழுமையாக

ஈடுபடுத்திக்கொண்டார்கள் என்பதைத்தான் காட்டுகிறது. இவ்விதமாக சவுலும், பர்னபாவும் உங்களுக்கும் எனக்கும் சிறந்த முன்மாதிரிகளா யிருக்கிறார்கள்! அந்த உண்மையுள்ள சகோதரர்களைப் போல நீங்களும், நானும் நாம் வசிக்கிற இடத்தில் கிறிஸ்துவின் சபையை தெரிந்து கொண்டு தேவனை ஆராதிப்பதிலும், அவருக்கு ஊழியம் செய்வதிலும் நம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்.

கர்த்தருடைய வேலையில் ஈடுபடுவதையும், கர்த்தரை ஆராதிப்பதையும் தவிர்ப்பதற்காக ஒரு சபையிலிருந்து மற்றொரு சபைக்கு தாவக் கூடாது. கிறிஸ்துவின் சரீரத்தில் அங்கமாயிருப்ப தோடு தொடர்புடைய வேறு சில காரியங்களில் இரண்டாவது கருத்து இதோ :

**ஆதி திருச்சபை நமக்கு என்ன உதாரணத்தை தருகின்றது? அதற்கு நாம் புதிய ஏற்பாட்டு வரலாற்று புத்தகமாகிய அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்திற்கு சென்று அவர்களுடைய ஆச்சரியமூட்டும் உதாரணங்களினால் தூண்டப்படவேண்டும்.**

*அப். 2:14-37* வசனங்களில், பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு பேதுரு பேசின வார்த்தைகளை ஜனங்கள் கூர்மையாக கவனித்தனர். பேதுரு அந்த ஜனங்களைப் பார்த்து இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்து கொலை செய்தீர்கள். தேவன் அவருடைய மரண உபாதிகளின் கட்டை அவிழ்த்து, அவரை எழுப்பினார்; அவர் மரணத்தினால் கட்டப்பட்டி ருக்கக்கூடாதிருந்தது என்று அவர்களைக் கடிந்து கொண்டார். அதோடு மாத்திரமல்ல நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும், கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்று பேதுரு கடுமையாகச் சாடினார்.

பேதுரு இந்த மாபெரும் பிரசங்கத்தைச் செய்த அந்த நாளில் ஜனங்களின் பதில் என்னவாயிருந்தது? பேதுரு தேவனுடைய வார்த்தையாகிய ஆவியின் பட்டயத்தை எடுத்து பயன்படுத்திய போது, ஜனங்கள் தங்கள் இருதயத்தில் குத்தப்பட்டார்கள்! தெளிவாக வே, அந்த ஜனங்கள் தங்கள் பாவத்தைக் குறித்து கண்டித்து உணர்த்தப் பட்டார்கள். மேலும், அவர்கள் தங்கள் பாவங்களைக் குறித்து தேவனுக்கேற்ற துக்கம் உடையவர்களாய் காணப்பட்டார்கள்.

அவர்களுடைய தேவனுக்கேற்ற துக்கம் அவர்கள் என்ன செய்யும்படியாக தூண்டியது? அவர்கள் பேதுருவையும், மற்ற அப்போஸ்தலர்களையும் பார்த்து கீழ்க்காணும் வல்லமையுள்ள ஆழமான கேள்வியைக் கேட்கும்படியாக வைத்தது. சகோதரரே, நாங்கள் என்னச் செய்ய வேண்டும்? என்று கேட்டார்கள். நம்முடைய அன்புள்ள தேவ னிடமிருந்து அவர்களுடைய பாவங்கள் அவர் களைப் பிரித்து விட்டது என்பதை அறிந்திருந்தார்கள். மேலும், இதை யும் கவனியுங்கள். பிரியமானவர்களே, அவர்கள் தேவனிடமிருந்து பாவ மன்னிப்பைப்பெற ஏதோ ஒன்றைச் செய்ய வேண்டும் என்று உணர்ந்து கொண்டார்கள்.

*அப். 2:38-47* வசனங்களை வாசியுங்கள். 38வது வசனத்தை தயவு செய்து ஜாக்கிரதையாக கவனியுங்கள். தேவனிடமிருந்து பாவ மன்னிப்பைப் பெற அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதற்கான ஜனங்களுடைய கேள்விக்கு தேவ ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலன் எப்படி பதில் அளித்தார்?

பிரியமானவர்களே, பேதுரு இன்றைய நாட்களில் உள்ள பிரசங்கிமார்களிடமிருந்து எப்படி வேறுபடுகிறார்? அவர்கள் இயேசுவை விசுவாசித்தபடியால், தங்கள் பாவங்களைக் குறித்த தேவனுக்கேற்ற துக்கம் இருந்தபடியால், இயேசுவைத் தங்கள் ஆண்டவராகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டபடியால் ஏற்கனவே அவர்களுடைய பாவங்கள் எல்லாம் மன்னிக்கப்பட்டு விட்டது என்று இன்றைக்கு அநேக பிரசங்கியார்கள் சொல்வதுபோல் சொல்லவில்லை. அல்லது இன்றைய நாட்களில் அநேக பிரசங்கி யார்கள் பிரசங்கிப்பது போல பாவமன்னிப்பைப் பெற்றுக் கொள்ள பாவிகளின் ஜெபத்தை செய்ய பேதுரு அப்போஸ்தலன் சொல்ல வில்லை.

பேதுரு அவர்கள் என்ன செய்யும்படியாகச் சொன்னார்கள்? அவர்கள் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறவேண்டும் என்று கட்டளையிட்டார். அவர்கள் ஏன் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற வேண்டியிருந்தது? அவர்கள் தங்கள் கடந்த கால பாவங்களிலிருந்து பாவமன்னிப்பைப் பெற அவர்கள் அப்படி செய்ய வேண்டிய தாயிருந்தது!.

பிரியமானவர்களே, இன்று உங்களுக்கும் எனக்கும் இந்த இரட்சிப்பின் முறை அப்படியே தான் இருக்கிறது! இந்த வசனத்தை நாம் விட்டுச் செல்வதற்கு முன்பு, இந்த உண்மையை ஜாக்கிரதையாக கவனியுங்கள். அந்த ஜனங்கள் இயேசுவை விசுவாசித்திருந்த போதி லும், இயேசுதான் தங்கள் ஆண்டவர் என்ற உண்மையை ஏற்றுக் கொண்ட போதிலும், தேவனுக்கேற்ற துக்கமுடையவர்களாயிருந்த போதிலும் அவர்கள் தங்கள் பாவங்களில் இழந்து போனவர்களாகத் தான் இருந்தார்கள்! அது நமக்கு எப்படித் தெரியும்? அவர்கள் பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று பரிசுத்த ஆவியானவர் பேதுருவை ஏவி அவர் களிடம் சொல்லச் சொன்னதன் மூலமாக நமக்குத் தெரிகிறது.

கர்த்தருக்குச் சித்தமானதால், அடுத்த மாதம் தேவ ஆவியினால் ஏவப்பட்ட பேதுருவின் செய்தியையும், அந்த ஆத்துமாவை இரட்சிக் கும் வல்லமையுள்ள செய்திக்கு ஜனங்களுடைய பதிலையும் நாம் தொடர்ந்து விவரமாக ஆராய்வோம். அந்த உண்மையுள்ள ஜனங்களின் அற்புதமான உதாரணத்தினால் உங்கள் இருதயம் தூண்டப்பட ஆயத்தமாயிருங்கள்.

***Charlie Dipalma*** ***Benny Martin***

# இரத்த சாட்சிகள் தொடர் கட்டுரை

## பாடம் - 12 அப்போஸ்தலனான மத்தியா

**வா**சகர்கள் அனைவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள் பல. தொடர்ந்து இக்கட்டுரையைப் படித்துப் பயனடைந்து வருகிறீர்கள் என்று அறியும் போது மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இம்மாதத்திலும் இத்தொடர் கட்டுரையை உங்களோடு படிக்க தேவன் கிருபை செய்திருக்கிறார். இரத்த சாட்சியாக மரித்த மத்தியாவைக் குறித்து தெரிந்து கொள்வோமாக.

**I. இவரது வாழ்க்கைக் குறிப்பு :** மத்தியா என்றால் "கர்த்தரின் ஈவு" என்று பொருள். இந்தப் பொருளுக்கேற்றபடி தேவன் யூதாசுக்கு பதிலாக அப்போஸ்தலரில் ஒருவராக தெரிந்தெடுக்கப்பட்டார். இவரைக் குறித்து அப்போஸ்தலர் 1:15-26ல் உள்ள வசனப்பகுதியில் மட்டுமே சொல்லப் பட்டுள்ளது. வேறு எங்கும் சொல்லப்படவில்லை. ஆயினும் முதல் நூற்றாண்டில் வாழ்ந்த யோசிப்பஸ் என்ற வரலாற்று ஆசிரியர் குறிப்பிடும் போது மத்தியா இயேசுவோடு இருந்தவரில் இவரும் ஒருவர் என்றும் இவர் கலிலேயாப் பகுதியைச் சார்ந்தவர் என்றும் குறிப்பிடுகிறார். லூக்காவும் அப்போஸ்தலர்கள் அனைவரையும் குறிப்பிடும்போது (மத்தியா உட்பட) இவர்கள் எல்லாரும் கலிலேயரல்லவா? என்று எழுதுகிறார். (அப் 2:7) இவர் இயேசு கிறிஸ்துவுக்காக சாட்சி கொடுத்து இறுதியில் இரத்த சாட்சியாகக் கொல்லப்பட்டார் என்று ஏவுதல் பெற்றிராத பாரம்பரிய வரலாறு தெரிவிக்கின்றது.

**II. இவர் அப்போஸ்தலராக ஏற்படுத்தப்பட்ட விதம் :** இயேசுவானவரால் தெரிந்துகொள்ளப்பட்ட 12 அப்போஸ்தலரில் ஒருவனான யூதாஸ் காரியோத்து நான்று கொண்டு இறந்த பிறகு 11 அப்போஸ்தலரும் மற்றும் 120 பேர் கொண்ட சீஷர் குழுவும் ஒன்றாகச் சேர்ந்து 12வது அப்போஸ் தலரைத் தெரிவு செய்ய முடிவு செய்தனர். அன்றைய நாளில் அப்போஸ்தலப் பட்டத்திற்கு இரண்டு பேர்கள் தகுதியுடையவர்களாகக் காணப்பட்டனர். ஒருவர் யுஸ்து என்னும் மறு நாமமுள்ள பர்சபா எனப்பட்ட யோசேப்பு, இன்னொருவர் மத்தியா. யூதர்களுக்கு 12 என்ற எண் முழுமையைக் காண்பிக்கிறதாக உள்ளது. ஏனென்றால், அவர்களின் பிதா யாக்கோபு 12 குமாரர்களைப் பெற்று அந்த 12 குமாரர்கள் 12 கோத்திரங்களாக உருவெடுத்தது. யூதா கோத்திரத்தில் தோன்றின நமது இரட்சகர் இயேசு கிறிஸ்துவும் தமக்கு சீஷர்களாக 12 பேரை தெரிந்து கொண்டார். இப்படிப்பட்ட முழுமை எண் 12க்கு ஒன்று குறைந்த படியால் அதை முழுமையடைய 12வது அப்போஸ்தலனை தெரிந்து கொள்ள அவர்கள் ஒன்று கூடினர்.

தேவனுடைய ஊழியம் செய்ய அவருடைய ஆலோசனையும் அவருடைய சித்தமும் மிகவும் அவசியமாகத் தேவைப்படுகிறது. அப்போஸ்தல ஊழியத்திற்கு அவருடைய ஆலோசனையைப் பேதுரு இவ்விதமாகக் கூறுவதைக் கவனியுங்கள். யூதாசைக் குறித்துப்

பரிசுத்த ஆவி தாவீதின் வாக்கினால் முன் சொன்ன வேத வாக்கியம் நிறைவேற வேண்டியதாயிருந்தது என்று அப் 1:16ல் கூறி 20வது வசனத்தில் சங்கீதப் புஸ்தகத்திலே அவனுடைய வாசஸ்தலம் பாழாகக்கடவது (அப்போஸ்தல ஊழியத்தை) வேறொருவன் பெறக் கடவன் என்று தேவனுடைய ஆலோசனையைப் பேதுரு கூறினார். அப்போஸ்தலனை தேர்ந்தெடுப்பது தேவ ஆலோசனை யின்படியே. மேலும் அப்போஸ்தலனாக வருவதற்கு மூன்று தகுதி யாம்சங்கள் தேவையாக உள்ளது என்று பேதுரு வலியுறுத்தினார். அவையாவன

1. அப்போஸ்தலர்களுடன் கூட இருந்த, அதாவது யோவான் ஞானஸ் நானம் கொடுத்த நாள் முதற்கொண்டு இயேசுவை மேசியா என அறிந்திருந்த மனுஷர்களில் ஒருவனாக இருக்க வேண்டும். (ஒருத்தி அல்ல. அதாவது பெண்ணை நியமிக்கக் கூடாதிருந்தது).

2. இயேசுவின் ஊழிய நாட்களெல்லாம் அவருடனும், அப்போஸ்தலருடனும் அதிகமாகச் சஞ்சரித்தவனாக இருக்க வேண்டும்.

3. இயேசுவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலைப் பார்த்த வராக இருக்க வேண்டும் (அப். 1:21,22)

இம்மூன்று தகுதியம்சங்களை இருவர் மட்டுமே அன்றைய நாட்களிலே பெற்றிருந்தனர். ஆனால் இன்றைய நாட்களில் அநேகர் தங்களை அப்போஸ்தலர்கள் என்று அழைத்துக் கொள்கிறார்கள். இது தேவ ஆலோசனைக்கு விரோதமாகச் செயல்படுவதாகும். அப்படிப் பட்டவர்கள் கள்ள அப்போஸ்தலர்கள் கபடமுள்ள வேலையாட்கள் கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலன் வேஷத்தைத் தரித்துக் கொண்டவர்களாயிருக்கிறார்கள் (2கொரி 11:13).

யூதாசுக்குப் பதில் மறுநியமனம் செய்ய ஒரு மனிதர் மட்டுமே தேவைப்பட்டான். ஆனால் இருமனிதர்கள் யோசேப்பும், மத்தியாவும் இருந்தபடியால் இக்காரியத்தை தேவனுடைய சித்தத்திற்கு ஒப்படைக்க முடிவு செய்தனர். அதாவது இவ்விரண்டு பேரையும் நிறுத்தி ஜெபம் செய்தனர். (அப் 1:24,25) பின்பு அவர்களைக் குறித்துச் சீட்டுப் போட்டார்கள் (அப். 1:26) இந்த முறை அன்றைய நாளிலே நடை முறையில் இருந்த பழைய ஏற்பாட்டின் வழி முறை யாக இருந்திருக்கலாம். உதாரணமாக, சகரியா (யோவான் ஸ்நான கனின் தந்தை) ஆசாரிய ஊழியத்தைப் பெற்றுக் கொள்ள இந்த முறையைப் பெற்றான் (லூக் 1:9) சீட்டு மடியிலே போடப்படும் காரிய சித்தியோ கர்த்தரால் வரும் (நீதி 16:33) இந்த முறைமையை சபை ஸ்தாபிக்கப் பட்ட பின்பு அப்போஸ்தலர்கள் விட்டு விட்டனர். (கொலோ2:14-16) சபையில் மூப்பர்கள், உதவிக்காரர்கள் தேர்ந் தெடுக்க இந்த முறையைக் கையாளவில்லை. (1தீமோ 3: ) இது இன்றைய நாட்களில் மூட நம்பிக்கையாகும். நாம் எல்லா காரியத் திற்கும் வேத வாக்கியங்களையே நாட வேண்டும். (2தீமோ 3:16,17).

### III. இவரது ஊழியமும், இரத்தசாட்சியும்

மத்தியாவின் பேருக்கு சீட்டு விழுந்தது. அப்பொழுது அவன் பதினோரு அப்போஸ்தலருடன் சேர்த்துக் கொள்ளப்பட்டான். (அப் 1:26) அதாவது அப்போஸ்தல ஊழியத்தின் 12ல் ஒருவரானார்.

புதிய ஏற்பாட்டில் இவரது பெயர் மறுபடியும் காணப்படுவதில்லை. ஆனால், அப்2ல் பேதுரு பதினொருவரோடுங் கூட நின்று என்ற வசனத்தில் மத்தியாவும் இருந்தார். அப்போஸ்தலருடனே கூட இவரும் எருசலேமிலும் யூதேயா முழுவதிலும் சமாரியாவிலும், பூமியின் கடைசிப் பரியந்தமும் இயேசு கிறிஸ்துவுக்குச் சாட்சியானார். (அப் 1:8).

அப்போஸ்தலனான மத்தியாவைக் குறித்து வரலாறு தெரிவிக்கும் பொழுது இவர் எத்தியோப்பியா தேசத்திற்குச் சென்று கர்த்தருடைய ஊழியத்தைச் செய்திருக்கின்றார். அங்கு சுவிசேஷகனான பிலிப்பு மூலமாக சுவிசேஷத்தைக் கேட்டு கீழ்ப்படிந்த எத்தியோப்பிய மந்திரி தேவ பயமுள்ளவராக வாழ்ந்துகொண்டிருந்ததை முன்னிட்டு மத்தியா அங்கே சென்றார்.

எத்தியோப்பியா என்று அன்றைய நாட்களிலே அழைக்கப்பட்ட தேசமானது விக்கிரகக் கோவில்கள் கொண்ட தேசமாக இருந்தது. எனவே, தேவன் தமது பிள்ளைகளான யூதர்களைக் குறிப்பிடும் பொழுது நீங்கள் எனக்கு எத்தியோப்பியரின் புத்திரரைப் போல இருக்கிறீர்கள் (புறஜாதிகளைப்போல்) என்றார். (ஆமோஸ் 9:7)

இந்த புறஜாதிகளில் முதலாவதாகக் கீழ்படிந்தவர் மந்திரி ஆவர். (அப் 8:36-39) பின்பு மத்தியா சென்று சுவிசேஷத்தை அறிவித்திருக்கின்றார். அப்போது எத்தியோப்பியா என்று அழைக்கப்பட்ட தேசம் இன்று நமீபியா என்று அழைக்கப்படுகிறது. இது எகிப்து மற்றும் சூடான் பகுதியில் நைல் நதியின் கரையோரமாக இருக்கும் அஸ்வான் மற்றும் கார்தூம் ஆகிய ஊர்களுக்கிடையே அமைந்திருக்கிறது. இங்கே கருப்பர் இனத்தைச் சார்ந்தவர்கள் பெரும்பாலும் வாழ்ந்து வருகின்றனர்.

மத்தியா எத்தியோப்பியாவில் சுவிசேஷம் அறிவித்தபடியால் அநேகர் விசேஷமாக அரசு அதிகாரிகள் பலர் கிறிஸ்துவை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றனர். இதன் விளைவாக அவருக்கு பலத்த எதிர்ப்பு ஏற்பட்டதாகத் தெரிகிறது. ஆகவே மத்தியாவை சிறையில் தள்ளி அவருக்கு மரணதண்டனை கொடுக்கப்பட்டது. அவரை அந்நாட்டு அரசாங்கம் கி.பி.70க்கு பிறகு சிரச்சேதம் செய்தது. அவர் இரத்த வெள்ளத்தில் மரணமடைந்து இவ்விதமாக இரத்த சாட்சியானார் என்று வரலாறு கூறுகின்றது.

அன்பானவர்களே, கர்த்தருடைய ஊழியத்தில் கடும் எதிர்ப்புகள் தோன்றும் அந்த எதிர்ப்புகளுடன் தொடர்ந்து ஊழியத்தை நிறைவேற்ற வேண்டும்.

“நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு தீங்கநுபவி சுவிசேஷகனுடைய வேலையைச் செய் உன் ஊழியத்தை நிறைவேற்று” (2 தீமோ 4:5).

(தொடரும்)

K. பாஸ்கர், சிறுமுகை.

# கிறிஸ்துமஸ்

தேவனால் உண்டாக்கப்பட்டு, ஏதேனில் (இன்பம்) அவரை நேருக்கு நேராக கண்டு பேசி வாழ்ந்த ஆதாம், ஏவாளுக்கு கொடுக்கப் பட்ட எளிய, இனிய கட்டளையை அவர்கள் மீறினர், ஏதேனிலிருந்து அனுப்பப்பட்டவர்களின் மூத்தமகன் காயீன் தேவனை ஆராதிக்கக் கூடிய கட்டளையை தம்முடைய தந்தையின் வாயிலாக அறிந்திருந் தும் தன்னுடைய பாவத்தை போக்கும்படியான பலி செலுத்தாமல், தன் சொந்த வழியில் (தேவனுக்குப் பிரியமில்லாத) காணிக்கை செலுத்தி ஆசீர்வாதத்தை இழந்தான், அவனுக்கு பிறகு பிறந்த ஆபேல் மட்டுமே தேவனுக்குப்பிரியமான பலி செலுத்தி தேவனால் நற்சாட்சி பெற்ற துடன் அவன் மரித்தும் இன்னும் பேசும்படியான (எபி 11:4) நல்லா ராதனையை செய்தான். அவனுக்குப் பிறகு இன்று வரை பிறந்த7500 கோடி மக்களெல்லாரும் தேவனை ஆராதிக்க வேண்டிய முறையை கடைபிடிக்காமல் எல்லாருமே தம்தம் சொந்த (காயீன்) வழியில் ஆராதித்து வருகிறோம். அதனால் தான் தேவ ஆசீர்வாதங்களை இழந்து வருகிறோம்.

மோசேயின் மூலம் தேவ கற்பனைகளை (கட்டளைகளை) பெற்ற இஸ்ரவேலர்கள் சில நாட்களுக்குள்ளாக மோசே மலையி லிருந்து இறங்கிவரத் தாமதிக்கிறதை ஜனங்கள் கண்ட போது, அவர்கள் ஆரோனிடத்தில் கூட்டம் கூடி, அவனை நோக்கி; எகிப்து தேசத்திலிருந்து எங்களை அழைத்துக் கொண்டு வந்த அந்த மோசேக்கு என்ன சம்பவித்ததோ அறியோம். ஆதலால் நீர் எழுந்து எங்களுக்கு முன் செல்லும் தெய்வங்களை எங்களுக்காக உண்டு பண்ணும் என்றதோடு, அவர்களிடமிருந்து பொன்னணிகளை கழற்றி கொடுத்து ஒரு பொன் கன்று குட்டியை உண்டாக்கி, அவர்களை எகிப்து தேசத்திலிருந்து அழைத்து வந்த தெய்வங்களுக்கு ஒரு பலிபீடம் கட்டி கர்த்தருக்கு (அவர் விரும்பாத) பண்டிகை கொண்டாடி புசித்து, குடித்து உட்கார்ந்து, விளையாடி தங்களைக் கெடுத்துக் கொண் டார்கள் (யாத். 32:1-7).

21-ம் நூற்றாண்டில் வாழும் கிறிஸ்தவர்களில் அநேகர் இன்றும் புதிய ஏற்பாட்டில் காணப்படாத இயேசு கிறிஸ்து கற்பிக்காத, அவரின் சீடர்கள் பின்பற்றாத போதிக்காத வீணான பண்டிகைகளை போதித்து, கடைபிடித்து வருவது தேவனுக்கு எவ்வளவு துக்கத்தை உண்டாக்கும் என்பதை நாம் அறிந்துகொண்டு, மற்றவர்களையும் அறிய வழிவகுப் போம்.

நீங்கள் முன்னமே சத்திய வசனமாகிய சுவிசேஷத்தினாலே கேள்விப்பட்டீர்கள், அந்த சுவிசேஷம் உலகமெங்கும் பரம்பிப் பலன் தருகிறது போல..... கொலோ 1:6 உலக இரட்சகர் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு 25 ஆண்டுகளுக்குள்ளாக "... எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்பட்டது" (லூக்கா 24:47). இயேசு கிறிஸ்துவின் கடைசி

பெரிய கட்டளைகளை அவரின் சீடர்கள் நிறைவேற்றினர். பெந்தெகொஸ்தே நன்னாளில் எருசலேமில் ஒன்று கூடிய பக்தியுள்ள யூதர்கள் பேதுருவினால் முதன் முதலாக பிரசங்கிக்கப்பட்ட நற்செய்தியை கேட்டு, விசுவாசித்து, அறிக்கையிட்டு, மனந்திரும்பி 3000 பேர் ஞானஸ்நானம் பெற்றனர். நாடு திரும்பிய அவர்கள் சென்ற இடமெல்லாம் நற்செய்தியை அறிவித்தார்கள் (அப் 8:4) மற்றும் யூதேயா, சமாரியா, எத்தியோப்பியா (எகிப்து) அப் 8ம் அதிகாரம், மேலும் ஆசியா (மதங்களின் தொட்டிலானது) முழுவதும் அப் 19:26ம் விக்கிரக ஆராதனைக்கு பெயர் போன ஆசியாவின் எபேசு பட்டணத்தில் மகாதேவியாகிய தியானாளின் விக்கிரகத் தொழில், மற்றும் ஆராதனை நின்று போகும்படியாக பவுலடியாரின் பிரசங்கம் வழி வகுத்தது. கி.பி. 52-ல் தோமாவினால் தென்னிந்தியா மற்றும் வட பகுதிகளிலும் சுவிசேஷத்திற்கு 6000 பேர் கீழ்ப்படிந்தனர் என்று பிற சரித்திரம் கூறுகிறது.

ரோமர்கள் வழக்கமாக சூரியனை வழிபடவும், மன்னர் அறிலியஸ் (Aurelius) பிறந்த நாளை கொண்டாடுவதற்கு பதிலாக இரண்டாம் ஆதாம் (முதல் ஆதாம் 6ம் நாளில் உண்டாக்கப்பட்டதை போல) கிறிஸ்து இயேசுவின் பிறந்த நாளாக கி.பி. 336 ஜனவரி 6ம் நாள் முதன் முதலாக கிறிஸ்துமஸ் பண்டிகை கொண்டாடப்பட்டது. இதனை எகிப்தின் அலெக்சாண்டிரியா மற்றும் கிழக்கத்திய நாடான அரேபியாவில் கொண்டாட தொடங்கினர். கிறிஸ்துமஸ் கொண்டாடிட இயேசு கிறிஸ்துவோ அல்லது அவரின் சீடர்களோ கட்டளையிடவில்லை மற்றும் மற்றவர்களுக்கு போதிக்கவில்லை என்பதை சிந்திப்போமாக. அதன்பிறகு மேலும் சிலர் எழும்பி தங்களின் விருப்பம் போல பண்டிகை கொண்டாடிட தொடங்கினர்.

வேதாகமத்தில் காணப்படாத இவ்விதமான பண்டிகைகள், ஆராதனைகளை கத்தோலிக்கர்கள் கி.பி. 600ம் ஆண்டிற்கு பிறகு புதிய முறைகளில் ஆராதிக்க தொடங்கினர்.

**Low Mass :** ரோமர்களின் அடிமைகள் அதிகாலையில் இருட்டோடே தேவாலயத்திற்கு சென்று பாட்டு பாடாமல், பிரசங்கத்தை கேளாமல், தாங்களே ஜெபித்ததுதான் இதுவும் ஒரு ஆராதனையாக கருதப்பட்டது.

**Sung Mass :** இவ்வாரதனையில் பாடல் உண்டு, ஜெபம் உண்டு.

**High Mass :** இது உயர்வான சிறப்பாராதனை. இதில் பாடல், ஜெபம், பிரசங்கம், காணிக்கை, திருவிருந்து இருக்கும். சிறப்பாக, இறந்தவர்களுக்காகவும் ஜெப வேண்டுதல் ஏறெடுக்கப்படும்.

**Dry Mass :** இதில் வழக்கமாக பிரசங்கிப்பவர் இல்லாத போது, அவரின் அனுமதியின் பேரில் அவரின் உதவியாளர்களால் நடத்தப்படும் ஆரானையாகும்.

**Gregorian Mass :** கிரிகோரியன் மாஸ், இதில் சிறப்பாக குறிக்கப்பட்டவைகளுக்காகவும், குறிப்பிட்ட நிகழ்வுகளுக்காகவும், இறந்து போன சிறப்பானவர்களுக்காகவும் தொடர்ந்து பல நாட்கள்

நடத்தப்படும் ஆராதனையாகும். மேலும், லெந்து நாட்களில் (40 நாட்கள்) ஆராதனை நடக்கும். இவர்களால் தான் இயேசு கிறிஸ்துவின் படத்துடன், மரியாள், யோசேப்பு (சூசை) உடன் உள்ள படத்திற்கு மாலையிட்டும் மெழுகுவர்த்தி ஏற்றியும், அதனை பல வகைகளில் அலங்கரித்து வணங்கி வழிபட்டு வருவது வேதாகமம் கூறாத ஆராதனைகளாகும்.

மோசேயின் பிரமாணத்தை நிறைவேற்றிக் கொண்டிருந்த இயேசு இரட்சகர், யூதர்கள் கடைபிடித்து வந்த பஸ்கா பண்டிகைக்குத் (கடந்து போதல்) தவறாது வந்தார். பஸ்காவை புசிக்க ஆசையாயிருந்தேன் (லூக்கா 22:15) என்றதுடன் அவரின் சீடர்கள் (நாமும் கூட) அவரின் மரணத்திற்கு பிறகு (பஸ்காவுக்கு பதிலாக) கடைபிடிக்க வேண்டிய "புதிய உடன்படிக்கையை" கைக்கொள்ள உபதேசித்தார் (எரேமியா 31: 31-34) மத்தேயு 26:26-29, மாற்கு 14:22-25; ஆனால் இன்று சபைகளில் நடத்தப்படும் ஞாயிறு ஆராதனையில் திருவிருந்து வாரா வாரம் பங்கு பெறாமல் மாதத்திற்கு ஒரு முறையோ ஆண்டுக்கு ஒரு முறையோ அல்லது அவர்கள் விருப்பம் போல கைக்கொள்ளுகிறார் கள். (அப். 20:7; 1கொரி 16:2ன்படி வாரத்தின் முதல் நாள் தோறும் கடைபிடிக்க வேண்டிய தேவ கட்டளையை மறந்து விடுவது எத்தனை கோபாக்கினைக்குரியது என்பதை எண்ணிப்பார்க்கக் கடவோம்.

ஆனால், டிசம்பர் 25ம் தேதியன்று கிறிஸ்துமஸ் பண்டிகை யை கொண்டாடிட தவறுவதே இல்லை (வேதாகமம் கட்டளை இடாதது) ஞாயிறு ஆராதனையில் 1. பாடல்கள் 2. ஜெபங்கள் 3. பிரசங்கம் 4. கர்த்தருடைய திருவிருந்து 5. காணிக்கை ஆகிய இவ்வைந்து செயல்கள் ஒன்று கூட தவறாமல் நடைபெற்றால் தான் அது தேவன் விரும்பக் கூடியதும், ஆசீர்வாதமானதும் ஆகும் "....என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் (1கொரி 11:24,25) ஒரு பிரிவினர்கள் அப்பத்தை மாத்திரம் புசிக்கிறார்கள். மனுஷருடைய கற்பனைகளின் படியும் போதனைகளின்படியும் நடப்பதென்ன (கொலோ 2:21,16,19) எனவே கிறிஸ்துமஸ் விழா, கிறிஸ்துமஸ் மரம், நட்சத்திரம் (Star) மெழுகு வர்த்தி ஏற்றுதல் மற்றும் பலவித மனித நடவடிக்கைகளை கைக்கொள்வது தேவனுக்குப் பிரியமில்லாத அவர் கட்டளை இடாத செயலாகும். "மேலும் தேவ பக்தியுள்ளவனாயிருந்து அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்கு (மட்டுமே) அவர் செவி கொடுப்பார்" (யோவான் 9:31).

கி.மு. 712ல் இந்த ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து தங்கள் உதடுகளால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள் (Lip Service) அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது "....மனுஷனாலே போதிக்கப்பட்ட கற்பனையாயிருக்கிறது" என்று ஏசாயா 29:13 கூறியதை நன்கு அறிந்தவர்கள் "...இயேசு கிறிஸ்துவும் ....வீணாய் எனக்கு (Vain Worship) ஆராதனை செய்கிறார்கள்" என்றார் மத் 15:6-9; யாக் 3:17; மாற்கு 7:6-8 வாசியுங்கள் சிந்தியுங்கள்.

## இன்றைய காயீன்கள் :

தேவகட்டளைகளை கடைபிடிக்காமல் தம் சொந்த வழியிலே நடந்து ஆராதனை செய்வது பொல்லாங்கனாகிய காயீன் வழிச் செல்லாமல் 1யோவான் 3:12 இயேசுவானவர் நமக்கு கற்பித்த, உண்டாக்கின புதியதும், ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டு பண்ணின வழியாய் ஆராதிப்போம் (எபி. 10:19-20) விசுவாசத்தின் பூரண நிச்சயத்தோடும் சேரக்கடவோம். அப்படி இல்லாவிட்டால் பிதாவும், குமாரனும் நம்மை பார்த்து .... இவர்கள் காயீனுடைய வழியில் நடந்து பாவத்திற்குள்ளாகி, கெட்டுப்போனார்கள் (யூதா 11) என்றவர்களாவோம். இன்றைய உலகிலே எண்ணற்ற மதங்களும், கோடிக்கணக்கான இவ்வுலகில் வாழ்ந்திராத தெய்வங்களும், மனிதர் களால் உண்டாக்கப்பட்டு வணங்கப்பட்டு வருகிறது. ஆதியில் ரோமர் களும் தங்களின் தெய்வங்களோடு கிரேக்க கடவுள்களையும் சேர்த்து வழிபட்டனர். இன்றும் நாம் இன்னும் கட்டுக்கதைகளுக்கு செவி கொடாமல் கிறிஸ்து மூலம் வழங்கப்படும் இலவசமான இரட்சிப்பை பெற்று (அப். 4:12) அவருக்குப் பிரியமாய் வாழ்வோமாக! மற்றவர் களுக்கு அறிவித்து அவர்களனைவரையும் அழைப்போமாக. இயேசு கிறிஸ்துவின் பிறப்பை கொண்டாட திசம்பர் 25ம் தேதி மட்டும் ஆராதிக்காமல் ஆண்டு முழுவதும் அவருக்கு நம் இதயத்தில் இடம் கொடுத்து வாழலாமே. நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணும் போது அவர் நம்முடன் (அவர் வாக்களித்தபடி) உலகின் முடிவு பரியந் தம் சகல நாட்களிலும் நம்முடனே கூட இருக்கிறார் என்பதை மத் 28:20 நாமும் மறவோம், மற்றவர்களும் மறவார்கள்.

எனவே நாம் மனித கற்பனைகளையும், கட்டளைகளையும் கைக்கொண்டு வாழாமல், நாம் தேவனிடத்தில் அன்பு கூர்ந்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்வோம் (1யோவான் 5:2) "அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல" (1யோவான் 5:3)

**JOHN S. NATHAN**


## புதிய ஏற்பாட்டில் உள்ள போதகங்கள்

1. கிறிஸ்துவின் பாடுகளைப் பற்றிய போதகம் (மாற்கு 9:31)
2. விருத்தசேதனத்தைப் பற்றிய போதகம் (அப் 15:1)
3. தந்திரமுள்ள போதகம் (எபேசியர் 4:14)
4. பிலேயாமின் போதகம் (வெளி 2:14)
5. பலவித அந்நிய போதகம் (எபிரெயர் 13:9)

# BIBLE MEDITATION

## TV PROGRAM



**HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA**

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

Regd. News Paper RNI No. 47661/87
Postal Regn. No. Erode/26/2006-2008
Posted at Erode HPO on 20/21 of Every Month

**திருமறை ஆசான்**
**இதழ் ஆசிரியரின்**
**திருமறை தியானம்**
**தொலைக்காட்சி நிகழ்ச்சிகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் TV | சனி | காலை | 7:15 | மணி |
| தமிழன் TV | ஞாயிறு | இரவு | 9:30 | மணி |
| தமிழன் TV | திங்கள் | காலை | 6:30 | மணி |

## வேதாகம அஞ்சல் வழிக் கல்வியில் ஒரு புதிய அத்தியாயம்

Advanced Bible Correspondence Course

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்க விரும்புபவர்களுக்கு இது ஓர் அரிய வாய்ப்பு.**

ஆம், வேதாகமமும், வேதாகமம் சார்ந்த பாடங்களும் கொண்டு **ஏழு** பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு, மிக ஆழ்ந்த முறையில் நெறிமுறைப்படுத்தப்பட்ட **100** பாடங்கள் அடங்கிய விரிவான வேதாகமக் கல்வி இது.

விருப்பமுள்ளவர்கள் தபால் செலவுக்கு
ரூ. 50/- மணியார்டர் அனுப்பி பதிவு செய்து கொள்ளவும்.

எங்களிடம் ஏற்கனவே அஞ்சல் வழிக்கல்வி BASIC BIBLE COURSE படித்து முடித்தவர்களும், படிப்பவர்களும் இதில் சேர்ந்து பயன்பெறலாம்.

இயக்குனர்,

**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ. எண் - 27, காங்கேயம் - 638 701.
தமிழ்நாடு, இந்தியா.

Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.
Editor. S. Rajanayagam.